பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 சித்திரை 01 திங்கட்கிழமை (14.04.1997) UTHAYAN A Lively National Tamil Daily ஒளி: 138

# தரைப் பாதையைத் திறப்பதற்கான ராணுவ நடவடிக்கை திட்டம் தயார்!

## இறுதிக் கட்ட ஏற்பாடுகள் குறித்து கொழும்பில் வியாழனன்று ஆராய்வு

கொழும்பு, ஏப்ரல் 14

வவுனியா - கிளிநொச்சி தரைவழிப் பாதையைத் திறப்பதற்கான இராணுவ நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு விட்டது.

அதனைச் செயற்படுத்துவதற்கான இறுதிக்கட்ட ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக சிரேஷ்ட படை அதிகாரிகள் பங்குபற்றும் உயர்மட்ட மாநாடு ஒன்று எதிர்வரும் வியாழக்கிழமை கொழும்பில் இராணுவத் தலைமையகத்தில் நடைபெறும்.

பாதுகாப்பு வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டிருக்கின்றன.

இத்தகைய இராணுவ நடவடிக்கைக்கான தயாரிப்பு வேலைகளில் வடமாகாண கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனா ஈடுபட்டுள்ளார்.

இது தொடர்பாக ஆராய்வதற்காக வியாழனன்று நடைபெறும் உயர் மட்ட மாநாட்டுக்கு சிரேஷ்ட அதிகாரிகளை அவர் அழைத்துள்ளார்.

தற்போது ஹவாய் சென்றிருக்கும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை இவ்வாரம் கொழும்பு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவர் கொழும்பு திரும்பியதும் மேற்படி இராணுவ நட

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஏப்ரல் 19 ஆம் திகதியை ஒட்டி புலிகள் பெரும் தாக்குதல்?

கொழும்பு, ஏப். 14

எதிர்வரும் ஏப்ரல் 19 ஆம் திகதியை ஒட்டி பெரும் தாக்குதல் ஒன்றை நடத்த புலிகள் திட்டமிட்டுள்ளார்கள் என்று தகவல் கிடைத்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

★ அன்னை பூபதியின் ஒன்பதாவது ஆண்டு நினைவு தினம்.

★ சந்திரிகா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மூன்று மாத கால யுத்த நிறுத்தம் முறிந்து மூன்றாம் ஈழப் போர் ஆரம்பித்து இரண்டாவது ஆண்டு நிறைவு தினம்.

★ யாழ் நகரைக் கைப்பற்றிய ஸ்ரீலங்காப் படைகள் வடமராட்சி, தென்மராட்சி ஆகியவற்றைக் கைப்பற்றுவதற்கான படை நடவடிக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையினர் எண்ணிக்கையை 18 ஆயிரமாக உயர்த்தத் திட்டம்

கொழும்பு, ஏப். 14

பதினெட்டாயிரம் துருப்புகள் கொண்டதாக கடற்படையின் பலத்தை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் திஸ்ஸ திசேரா தெரிவித்துள்ளார்.

பேட்டி ஒன்றில் அவர் இதைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடற்படையினர் தற்சமயம் 4 லட்சத்து 41 ஆயிரத்து 819 சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தை பாதுகாக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

தற்சமயம் கடற்படையில் 12 ஆயிரத்து 700 பேர் உள்ளனர். உடனடியாக ஆயிரத்து 200 பேரைத் திரட்ட திட்டமிடப்பட்டுள்ளது. கடற்படைத் துருப்புகளின் எண்ணிக்கையை 18 ஆயிரமாக அதிகரிக்க தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது.

துப்பாக்கி பொருத்தப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

மன்னார் கடலில் காணாமற்போன

## 5 கடற்படையினர், 3 பொலீஸாரின் சடலங்களை புலிகள் ஒப்படைப்பு


### செஞ். குழு பொறுப்பேற்பு

கொழும்பு, ஏப். 14

கடந்த 10 ஆம் திகதி மன்னார் கடலில் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் காணாமற் போனதாக அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட 5 கடற்படையினரினதும், 3 பொலீஸாரினதும் சடலங்களை விடுதலைப் புலிகள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் ஒப்படைத்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

மாங்குளத்தில் வைத்து விடுதலைப் புலிகள் இச் சடலங்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் ஒப்படைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் இத் தாக்குதலில் கடற்படைப் படகு ஒன்று அழிக்கப்பட்டது என்பது தெரிந்ததே. (உ-3-150)




பிறக்கும் ஈசுர புத்தாண்டில்
கஷ்டங்கள் நீங்கி
சுபீட்சமும் செளபாக்கியமும் ஓங்க
வாசகர்கள், விளம்பரதாரர்கள்,
முகவர்கள், செய்தியாளர்கள்
அனைவருக்கும்
உதயனின் நல் வாழ்த்துக்கள்!

மட்டு. மாவட்டத்தில்

## 2 படை முகாம்கள் மீது புலிகள் ஷெல் தாக்கு!

கொழும்பு, ஏப். 14

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள இரு இராணுவ முகாம்கள் மீது கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர் என்று கொழும்புப் பத்திரிகைத் தகவல்கள் தெரிவித்தன.

கடந்த சனிக்கிழமை காலை 7 மணியளவில் நாசிவன் தீவில் இருந்து வாழைச்சேனைக்கு அருகில் உள்ள பேத்தாளை இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் ஷெல்களை ஏவினர். ஷெல்கள் இராணுவ முகாமுக்குச் சமீபமாக வீழ்ந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கிரானுக்கு மேற்கே உள்ள பாலத்தடி முகாம் மீது வெள்ளி இரவு 9-30 மணியளவில் சுமார் அரைமணி நேரம் புலிகள் ஷெல் தாக்குதல் நடத்தினர்.

ஆர்.பி.ஜி. ரக ஷெல்களே வீழ்ந்து வெடித்ததாகப் படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்ட போதும் சேத விவரம் குறித்த தகவல்கள் வெளியாகவில்லை.

(உ-3-150

## திடீர்த் தேர்தல் குறித்து அரசுக்குள் முரண்பாடு

கொழும்பு, ஏப். 14

திடீர்த் தேர்தல் நடத்தும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் யோசனை தொடர்பாக அமைச்சர்கள் மத்தியில் கருத்து வேறுபாடு நிலவுவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

திடீர்த் தேர்தல் யோசனைக்கு பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த கைத்தொழில் அமைச்சர் சி. வி. குணரத்தின, பிரதி அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் ஆதரவாக இருப்பதாகவும் —

அமைச்சர்களான மங்கள சமரவீர, மகிந்தராஜபக்ஷ, எஸ். பி. திஸநாயக்க, கிங்ஸ்லி விக்கிரமரத்தின, அமரசிறி தொடங்கொட ஆகியோர் எதிர்ப்பதாகவும் —

தற்போது தகவல்கள் வெளியாகி உள்ளன.

அதேநேரம் —

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கலை இலக்கிய ஒன்று கூடல்

யாழ்ப்பாணம், ஏப். 14
தெல்லிப்பழை கலை இலக்கியகளத்தின் 42 ஆவது ஒன்று கூடல் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் சைவப் புலவர் சு. செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ)


ஊர்காவற்றுறை - தம்பாட்டி
நுணிபுரம் அருள் மிகு
ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய
வருடாந்த அலங்கார உற்சவம்

மேற்படி அம்பிகை சந்நிதானத்தில் 13 - 04 - 97 அலங்கார உற்சவத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று 22 - 04 - 97 சித்திராப் பௌர்ணமி தினத்தில் சித்திரக்கதை படிப்புடன் நிறைவுபெறும்.

அன்றைய தினம் மகேஸ்வர பூசையும், சித்திரைக் கஞ்சி வார்ப்பும் இடம் பெறும்.

ஆலய பரிபாலன சபையினர்.

சிவஸ்ரீ ரகுபதிசர்மா
ஆலய பிரதம குரு. (46364)



அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
வீடியோ விமலின்
புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக

உங்கள் வாழ்க்கையின் வசந்தகால நிகழ்வுகளை, அதியுயர் நவீன தொழில் நுட்பத்துடன் கூடியதாக உங்கள் எண்ணம் போல் வண்ணக் கோலங்களாக வீடியோ படமாக்கிட

வீடியோ விமல்

வெளியாகும் புதிய தமிழ் திரைப்படங்களை ஒறிஜினல் பிரதியாக பிரதியாக்கம் செய்திட வீடியோ விமல்

எமது ஒறிஜினல் வெளியீடுகள்
1] விசுவின் பட்டுக்கோட்டைப் பெரியப்பா
2] டுயட்
3] இந்து
4] தளபதி
5] எங்கிருந்தோ வந்தாள்
6] நம்ம அண்ணாச்சி

வீடியோ விமல்
9/1, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம். [46366]



31ஆம் நாள் நினைவஞ்சலி

55 ஆம் அகவையில் காலடியெடுத்துவைத்துள்ள எமது நிலையத்தின் ஆரம்பகால வளர்ச்சியில் அக்கறை கொண்டு சேவையாற்றிய

முன்னாள் கொக்குவில் கிராமசபைத் தலைவரும் முன்னாள் நல்லூர்த் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான பெரியார்

அமரர் சி. அருளம்பலம்

அவர்கட்கு இந்நாளில் எமது நினைவஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

நிர்வாகசபையினர்,
மனோன்மணி சனசமூகநிலையம்,
கொக்குவில்.

நந்தாவில் அம்மன் கோயிலடி,
கொக்குவில். (9514)



குருவே துணை
உயர்திரு வே. முருகேசு சுவாமி
அவர்களின்
31 ஆம் நாள் நினைவஞ்சலி

மேற்படி சுவாமி அவர்களின் 31 ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனை 16-4-97 புதன்கிழமை செல்வச் சந்நிதி முருகனது விசேட அபிஷேக ஆராதனையுடன் நடைபெற்று தொடர்ந்து அன்பர்கள் அடியார்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தில் மகேஸ்வர பூசையும் நடைபெறும். அன்பர்கள் அடியார்கள் கலந்து அத்தினத்தை சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

திரு. வே. முருகேசு சுவாமி அவர்களின்
அன்பர்கள்.
(சி/497)


## சீவல் தொழில் செய்ய அனுமதி

யாழ்ப்பாணம், ஏப். 14
நாவாந்துறை. கொட்டடிப் பகுதிகளில் மீண்டும் சீவல் தொழில் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தப்பகுதியில் சீவல் தொழில் செய்ய கொட்டடி இராணுவ அதிகாரி முன்னர் தடை விதித்திருந்தார்.

அது தொடர்பாக இப்பகுதி சீவல் தொழிலாளர்கள் ஈ. பி. டி. பியின் யாழ் அலுவலகத்தில் முறையிட்டிருந்தனர் என்றும் —

இது குறித்து தாங்கள் நகர தளபதியுடன் பேச்சு நடத்தியதையடுத்து. மீண்டும் அப்பகுதியில் குறிப்பிட்ட ஒரு பகுதி தவிர்ந்த ஏனைய இடங்களில் சீவல் தொழிலை மேற்கொள்ள தற்சமயம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் —

ஈ.பி.டி.பி. யாழ். அலுவலகம் தெரிவித்தது. (ஐ-3)

## புதிய படகு விரைவில் சேவைக்கு

நெடுந்தீவு, ஏப். 14
நெடுந்தீவு பல நோக்கு கூ. சங்கம் விரைவில் ''சமுத்திர தாரகை'' என்னும் மோட்டார்ப் படகு ஒன்றை சேவையில் சேர்த்துக் கொள்ளவுள்ளது. (ஐ-111)

## வடமராட்சியில் சேவைக்கால பயிற்சி

பருத்தித்துறை, ஏப். 14
பருத்தித்துறைக் கல்விக் கோட்ட பாடசாலைகளில் ஐந்தாம் ஆண்டு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திட்ட சேவைக்காலப் பயிற்சி வகுப்பு எதிர்வரும் 18 ஆம், 19 ஆம், 21 ஆம் திகதிகளில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறுமென பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. வே. தி. செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (ஐ-118)

## விசேட பஸ்சேவை

திருநெல்வேலி, ஏப். 14
மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய இரதோற்சவத்திற்குச் செல்லும் அடியார்களின் நலன்கருதி யாழ். மத்திய பஸ்நிலையத்தில் இருந்து மானிப்பாய்க்கு விசேட பஸ்சேவைகள் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளன. (ஐ-135)

## 3 புதிய பஸ்கள் வந்தன

திருநெல்வேலி, ஏப், 14
வட பிராந்திய போக்குவரத்து சபைக்கு கொழும்பிலிருந்து கப்பல் மூலம் மூன்று புதிய பஸ் வண்டிகள் நேற்று வந்துள்ளன, (ஐ-135)

## கட்டாக் காலி கால் நடைகளால் பாதிப்பு

கொழும்புத்துறை, ஏப். 14
யாழ். குடாநாட்டில் உள்ள பெரும்பாலான விவசாயிகள் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையினால் விவசாயம் செய்ய முடியாமல் அவலப்படுகின்றனர்.

கூடுதலாகக் கோப்பாய், நீர்வேலி, அச்சுவேலி' புத்தூர், ஆவரங்கால், புலோலி, பருத்தித்துறை கைதடிப்பகுதிகளில் பெருமளவு மாடுகள் கட்டாக்காலிகளாக பயிர் நிலங்களை மேய்ந்து திரிகின்றன.

இதனால் தற்போது அநேகமான விவசாயிகள் தமது பயிர்ச் செய்கை நிலங்களைச் சுற்றி வேலி அடைக்க வேண்டிய நிலைக்கு ஆளாகி உள்ளனர். (ஐ-30)

★ பரீட்சார்த்த நடுகைக்காக

## நல்லின பம்பாய் வெங்காயம் வடமராட்சியில் விநியோகம்

வடமராட்சி, ஏப். 14
வடமராட்சி வடக்கு, தெற்கு, மேற்கு ஆகிய பகுதிகளில் பம்பாய் வெங்காயச் செய்கை பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்படவுள்ளது.

இச் செய்கைக்கென இப்பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு புலோலி கமநலச் சேவை நிலையம் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி உயர் நல்லினமான '' நாசிக்ரெட் '' வர்க்கத்தைச் சேர்ந்த பம்பாய் வெங்காய விதைகளை வழங்கி வருகிறது.

இப் பரீட்சார்த்த பம்பாய் வெங்காயச் செய்கை வெற்றியளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதே வேளை —

வடமராட்சி கிழக்கில் அம்பன், நாகர்கோயில், செம்பியன்பற்று ஆகிய பகுதிகளில் பம்பாய் வெங்காயச் செய்கை கடந்த சில வருடங்களாக எதிர்பார்த்த விளைச்சல்களை தந்துவருவதையடுத்து இம் முறை அப்பகுதி மக்களினடயே பம்பாய் வெங்காயச் செய்கை மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளதாக புலோலி அம்பன் கமநல சேவை நிலையங்களின் பெரும்பாக உத்தியோகத்தர் திரு. எஸ். உருத்திரேஸ்வரன் தெரிவித்தார்.

இப்பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கும் இந் நல்லின பம்பாய் வெங்காய விதைகள் வழங்கப்படுகின்றன. (ஐ-173)

## வயாவிளான் ம. வித்தியாலயத்தை பழைய இடத்துக்கு மாற்ற உதவுக!

### அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 14
1986 ஆம் ஆண்டு முதல் 6 இடம் பெயர்வுகளைச் சந்தித்து இன்று உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு முன்பாக அடிப்படை வசதிகள் எதுவும் இன்றிய நிலையில் இயங்கும் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தை மீண்டும் பழைய இடத்தில் இயங்க ஏற்பாடுகளைச் செய்யுமாறு வயாவிளான் மத்திய மகா வித்தியாலய அபிவிருத்திச் சங்கம் யாழ். மாவட்ட கட்டளை அதிகாரியைக் கோரியுள்ளது.

சங்கத்தின் தலைவரும், வித்தியாலய அதிபருமான ஆ. சி. நடராஜா, சங்கச் செயலாளர் செ. செல்வரத்தினம் ஆகியோர் இது தொடர்பாக கடிதம் ஒன்றை கட்டளைத் தளபதிக்கு அனுப்பியுள்ளனர்.

உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு முன்பாகவுள்ள தனியாருக்கு சொந்தமான 12 பரப்புக் காணியில் அடிப்படை வசதிகள் எதுவும் அற்ற நிலையில் எமது வித்தியாலயம் தற்சமயம் இயங்கி வருகிறது.

250 பரப்புக் காணியில் சகல வளங்களுடனும் இயங்கி வந்த எமது வித்தியாலயம் முன்னர் செயற்பட்ட இடத்தில் இயங்க தாங்கள் உதவ வேண்டும்- என்று அதில் கேட்கப்பட்டுள்ளது. (ஐ-3)


''உண்மையே உயர் அறம்''
ஸ்கந்தவரோதயக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
யாழ்ப்பாணம்.
Skandavarodaya College
Old Students Association
Jaffna.

எமது சங்கத்தின் போசகராக திரு மு. இரத்தினம் அவர்களும, கௌரவ அங்கத்தவர்களாக டாக்டர் நகுலேந்திரன், திரு. இரா. சர்வானந்தா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். திருவாளர்கள் ம. சத்தியபாலன், சேதுவிபுலானந்தா, த. அ. செல்வராஜா ஆகியோரை முறையே தலைவர், செயலாளர், தனாதிகாரியாக உள்ளடக்கி 15 செயற்குழு உறுப்பினருடன் 1997 ஆம் ஆண்டுக்கான நிர்வாக சபை பின்வரும் செயற் திட்டங்களுடன் இயங்குகின்றது.

★ எமது கல்லூரியிலிருந்து பல்கலைக் கழகம் சென்ற மாணவர்களுக்கும், க. பொ. த (உ/த) வகுப்பில் கற்கும் மாணவர்களுக்கும், ஆண்டு 6 இல் புலமைப்பரிசில் சித்தியெய்தி எமது கல்லூரியில் கற்கும் மாணவர்களுக்கும், சகல மாணவர்களுக்கும், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்களுக்கும் கல்லூரியின் வளங்களை அபிவிருத்தி செய்ய உதவி செய்தல்.

இதற்கமைய இற்றைவரை செயற்படுத்தப்பெற்ற திட்டங்கள்.

★ சகல மாணவர்கள், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள், மறைந்த பழைய மாணவர்களான சரா. சேதுகாவலர், இரா. சுகுணசுந்தரம் நினைவாக திருவாளர்கள் சேது. விபுலானந்தா, இரா. சர்வானந்தா அன்பளிப்புச் செய்த அப்பியாசப் புத்தகங்கள் 24-03-97 இல் இலவசமாக வழங்கப்பெற்றன. தொண்டர் ஆசிரியர்களுக்கு 11-04-97 இல் ஊக்குவிப்பு உதவிகள் வழங்கப்பெற்றன.

தொடர்ந்து எமது செயற்பாடுகளை தொடர தயவு செய்து சங்க அங்கத்தவர்கள் தங்களது அன்பளிப்புகளை நேர காலத்துடன் கீழ்வரும் விலாசத்துக்கு அனுப்பி வைக்கும் வண்ணம் அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம். மேலதிக விவரங்களுக்கு செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

எமது புதுவருட வாழ்த்துக்களும்
பாராட்டுக்களும் எல்லோருக்கும் உரித்தாகுக.

சேது. விபுலானந்தா
செயலாளர்,
பழைய மாணவர் சங்க சார்பில்
207, கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம். (சி/498)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# புத்தாண்டு சிறப்பிதழ் - ஈசுர வருடம்

# இனிய புத்தாண்டு நல்லாசிகளும் வாழ்த்துக்களும்

## நல்லை ஆதீன முதல்வர்

### ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

அரிய பிறவி பெற்ற அன்புள்ளங்களே! அன்புடையீர்!

மனம் நிறைந்த பிரார்த்தனையோடு மலரும் புத்தாண்டை வரவேற்போம். ஈசுர வருடத்தில் இனியவை கண்டு இன்புற வேண்டுமென்று இறைவனை இறைஞ்சுகிறேன். அன்பு, இரக்கம், ஜீவகாருண்யம் உடைய நல்ல ஆத்மாக்கள் இவ் வையகத்திற்கு அவசியமானவை.

அவலமில்லாத ஆனந்தமான வாழ்வை புனிதப்படுத்தவே புத்தாண்டு ஒவ்வொரு வருடமும் பிறக்கிறது. தான் செய்த தவறுகளுக்கு மன்னிப்புக் கேட்பதும் தன் வாழ்வுக்கு உறுதுணையாக இருக்கும் இறைவனிடம் பேரருள் கேட்பதும் இத்திருநாளின் பிரதான வழிபாடகும். அத்தோடுஉற்றார் உலகத்தாரோடு உண்டு மகிழ்ந்து உறவுகளை உறுதுணை செய்வதும் இத்திருநாளின் இனிய கடனாகும்.

எனவே மனத்திற்கு பணிவும். மகத்தான பிறவியின் பேற்றினையும் இந்நாளில் எல்லோரும் பேணிப் போற்ற வேண்டும். உலகெங்கும் போட்டியும் பொறாமையும் வஞ்சகத்தன்மையும் மலிந்து காணப்படுகின்றன. இவற்றுக்குக் காரணம் இன்றைய மனிதரிடையே ஆன்மீகச்சிந்தனை வலுப்பெறாமையே. ஆன்மீக நெறி அகிலமெங்கும் வலுப்பெறுமானால் ஞானம், பக்தி, கர்மம், யோகம் ஆகிய நான்கும் மனிதனை சமரசப்படுத்தி துன்பத்திலிருந்து காப்பாற்றும்.

மனிதரிடையே மாண்பினை மேம்படுத்த இத்தகைய விழாக்களை இந்துக்கள் காலங்காலமாகப் பேணினார்கள். அரிய பிறவியாகிய மானிடப் பிறவியைப் பெற்ற இனிய ஆத்மாக்களே! நீங்கள் இயற்கையில் நல்லவர்கள். நல்லதை எண்ணுவீராயின் நற்கதி அடைவீர்.

(7 ஆம் பக்கம் பார்க்க)

## துர்க்காதுரந்தரி சிவத்தமிழ் அன்னை

### செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

''இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க'' என்ற வாக்கு இன்று எமது உள்ளத்தில் நிலைத்து வெளிவரட்டும்!

நாம் வைக்கும் ஒவ்வொரு அடியும் திருவருளை நோக்கி நகரட்டும். காலத்தை அளந்து அளந்து நல்லபடி வாழப் பழகிக் கொள்வதோடு கடந்த ஆண்டில் நாமாற்றிய தரமான செயல்கள் இவை; தவறான செயல்கள் இவை; என்பதனை உள்ளத்திற் கொண்டு புத்தாண்டில் தரமான பாதைக்கு எம்மை வழிப்படுத்துவோமாக. ஆத்மீக வாழ்வு என்பது நாம் ஆற்றும் சேவையிலேயே மலர வேண்டும்.

''தன்கடன் அடியேனையும் தாங்குதல் என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற வாசகம் எமது உள்ளத்தில் இடைவிடாது ஒலிக்கட்டும்.

புது வருடப் பிறப்பு விழாவை வெறுஞ் சடங்காக மட்டும் மேற்கொள்ளாமல் உள்ளத்திலும் புதுமை ஓங்கவும் ''நானும் வாழ்ந்து அடுத்தவனையும் வாழ்வாங்கு வாழவைப்பேன்'' என்ற சங்கற்பம் மேற்கொள்ளவும் முயல்வோமாக!

சமய வாழ்வு என்பது தனக்குத் தானே நற்சான்று பகர்வதிலே தான் வெற்றி காண்கிறது. எனவே புத்தாண்டை முன்னிட்டு எமது பணிகளை நல்லபடி வகுத்து, தெய்வத்தை முன்வைத்து, திருவருளைத்துணை கொண்டு அறிவிலே தெளிவும் நெஞ்சிலே உறுதியும் அகத்திலே அன்பும் கொண்டு வாழ வழி காண்போமாக.

ஈசுர வருடத்தில் எம்மினத்தவர் அனைவரும் மனநிம்மதியும், சுபீட்சமும், பக்திமேம்பாடும் துன்பநீக்கமும், இன்ப ஆக்கமும் சிறந்து ஓங்க வேண்டுமென்று தெல்லிப்பழை துர்க்காதேவியின் திருவருளைப்

(7 ஆம் பக்கம்பார்க்க)

# பருவமாய் நமது உள்ளம் பழுக்கவரும் புத்தாண்டு

இளவேனிற் காலம் தமிழர் மகிழ்ந்து குலாவும் காலம். இக்காலத்திலே இல்லாமை நீங்கும்; பிணி சொல்லாமை ஓங்கும். வாழ்வு வளம் பெறும். வளங்கள் நலம் பெறும். சூழும் துன்பம் தூரப் போகும். இக்காலத்தின் முதலாம் மாதம் சித்திரை தமிழ் வழங்கும் பெருநில மக்களும் சைவ நெறி பற்றி நிற்கும் மக்களும் சித்திரைப் பிறப்பை மெத்தவும் போற்றிக் கொண்டாடுவர்.

இக்காலத்தில் சூரியன் மேட இராசியிற் புகுந்து செயற்படுவான். இயற்கையில் நடைபெறும் மாற்றங்கள் எல்லாம் சூரியனின் நிலையைக் கருத்திற் கொண்டே கணிக்கப்படுகின்றன. அதன்படி நம்மவர் 'யுவ' வருடத்திலிருந்து 'பவ' வருடம் வரை வருடங்களை அறுபதாகக் கணக்கிட்டனர். இந்த அறுபது வருடங்களும் சுற்றுவட்டத்தில் மாறிமாறி வரும். இந்த வருடம் 'ஈசுர' வருடமாகும்.

நம்மிடையே நடைமுறையிலுள்ள விரதங்கள், விழாக்கள், பண்டிகைகள் என்பன நமது வாழ்வோடு இணைந்துவிட்டன. பண்டிகைகள் பண்டுதொட்டு நடைமுறையில் பேணப்பட்டு வருபவையாகும். சித்திரை வருடப் பிறப்பு ஒரு சிறப்புப் பண்டிகையாகும்.

உள்ளுணர்வைத் தூய்மைப்படுத்தவும், இறையுணர்வை வளர்த்துக் கொள்ளவும், இவ்வுணர்வுகளின் மேம்பாட்டால் மனச்சாந்தி, உடற் சாந்தி, சமூகச் சாந்தி, உலகச் சாந்தி என்பன ஏற்படவும் இந்தச் சிறப்புப் பண்டிகை நாள்கள் எம்மை நெறிப்படுத்த வேண்டும்.

**நா. க. சண்முகநாதபிள்ளை**

பழையன களைதலும், புதியன புகுதலும் வாழ்வின் அனைத்து மட்டங்களிலும் ஏற்படுவதை நாம் உறுதிப் படுத்திக் கொள்ளுதல் இந் நாள்களிலே நல்ல பலனைத் தரும். சோம்பலும் சோர்வும் நீக்கி, கோபத்தையும் மன அங்கலாய்ப்புகளையும் போக்கி சகிப்புத் தன்மையையும், மனிதவிழுமியங்களையும் உள்ளத்திலே தேக்கி, சாந்தமும், அமைதியும், அன்பும், கருணையும் பெருகும் சமரசம் நிலவும் இடமாக நம் வாழ்விடங்களையும் மாற்றுதல் வேண்டும். அதன் பரிமாணம் சூழலையும், சமூகத்தையும், நாடுகளையும் உலகையும் ஈர்க்கும் வியாபகமாகவும் மாறுதல் வேண்டும்.

### மெய்நெறி வயப்பட்டவை

பண்டிகைக் காலங்களிலே, வீடு வாசல் சுத்தம் செய்தல், கோலமிடுதல், நிறைகுடம் வைத்தல், மருத்து நீர் வைத்து நீராடுதல், புத்தாடை அணிதல், ஆலய தரிசனம் செய்தல், பெரியோரின் ஆசி பெறுதல், ஏர்மங்கலம் செய்தல், கைவிஷேடம் பெறுதல், உற்றார், உறவினர், நண்பர்கள் இல்லங்களுக்குச் சென்று உறவுகளைப் பலப் படுத்தல், விழாக்கள் வைத்து சமூக மலர்ச்சியை உண்டாக்குதல். 'பகுத்து உண்டு பல்லுயிர் ஓம்புதல்' ''எல்லாமே எல்லோரும் வாழ்க இன்பமே சூழ்க'' என்ற மெய்நெறி வயப்பட்ட ஒழுக்க வழக்கங்களாகும்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இடரெலாம் தீர்ப்பாய்!

சித்திரைப் பெண்ணே மிக்க
சிறப்புறு நலங்கள் தந்து
இத்தரை போற்றும் நல்ல
இனிதுறு வாழ்வு நல்க
உத்தமி நீயே வல்ல
உறுதியோ டிங்குற் றாயே
இத்தனை நாளாய் உற்ற
இடரெலாம் தீர்த்தே வைப்பாய்!

பொலிகை ச. திருப்பதி

## புத்தாண்டு மலரவே!

மலரும் ஈசுர ஆண்டே வருக
மறைந்த நிகழ்வுகள் கனவாக மாற
புதிதான எண்ணங்கள் எம்மோடு வாழ
புத்துணர்ச்சியோடு எம்மக்கள் ஏகிட
தீயவை யாவும் பறந்தோடிச் செல்ல
பிரிந்த குடும்பங்கள் ஒன்றாகச் சேர
அயலூர் சென்றவர் தம் உறவை மீள
அடியில் மறைந்தவை மீள நிமிரவே
ஓடியே சிறார்களும் அகமகிழ்ந்து நிற்க
ஒன்றிய குடும்பங்கள் நலமோடு வாழ
ஆலய மணிகளின் ஓசை நலம்பெற
அடியவர் எமது செவிகளில் ஒலிக்கவே.

- நயினை விஜயன்

## எழுந்து நீ வருக!

இன்னலில் வாழும் எங்களைக் காத்திட
ஈசுர ஆண்டே, எழுந்தே வருக!
மன்னவன் போல மாண்புடன் வாழ்வு
மண்ணினில் படைக்க எழுந்தே வருக!
நன்னலம் உன்னால் பூமியில் விளைந்திட
நல்லதோர் ஆண்டாய் எழுந்தே வருக!
உன்காலத்தில் எம்மவர் உரிமைகள் பெற்றிட
உயரிய ஆண்டாய் எழுந்தே வருக!

காரை. எம். பி. அருளானந்தன்.

## சிந்திவா புன்னகையை!

ஆயிரம் கதிர்களுடன் ஆதவனும் ஆர்த்து எழு
ஆர்த்தெழுந்த ஆதவனை புள்ளினங்கள் பாடிநிற்க
புள்ளினத்தின் பாட்டொலியால் பூவினங்கள்
மொட்டவிழ்க்க
சித்திரைப் புத்தாண்டே சிந்திவா புன்னகையை
கார்மேகம் சூழ்ந்து கரியநிழல் படர்ந்திருந்த
போர்மேகம் ஓடிப் பொழுதெலாம் ஒழிந்திடவே
பாரிலுள்ளோர் முகம்மலர்ந்து அகம் குளிர்ந்து நிற்க
சித்திரைப் புத்தாண்டே சிந்திவா புன்னகையை
உற்றாரை உறவினரை பெற்றாரைப் பிள்ளைகளை
பல்வேறு திசைகளிலும் பலபக்கம் பிரிந்தவரை
ஒன்றாகச் சேர்த்துவைத்து உல்லாசம் கொண்டாட
சித்திரைப் புத்தாண்டே சிந்திவா புன்னகையை.

- செல்வி மா. மீனலோசனி.

இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
அழகுக்கு அழகு தரும் புத்தம் புதிய நவீன டிசைன்கள் நிறைந்த ஆடை வகைகளுக்கு நாடுங்கள்:
கோபிகா ஆடையகம்
இல. 4, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(உட்புறம்)

சித்தம் மலர்ந்திட சிந்தை இனித்திட உதித்தது புத்தாண்டு!
சுப முகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு பெயர் பெற்ற ஸ்தாபனம்
ராசி பட்டுச் சோலை
RASI SILK
70, 71 A நவீன சந்தை,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.
யாழ். நகரில் எமக்கு வேறு கிளைகள் இல்லை என்பதை வாடிக்கையாளருக்கு அறியத்தருகிறோம்.

வாடிக்கையாளர்களுக்கு
இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்!
புத்தாண்டில் புது யுக ஆடைகள் அணிந்திட
ராகம்ஸ் பட்டுச்சோலை
உங்களை அழைக்கின்றது
ராகம்ஸ் பட்டுச்சோலை
இல. 24, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

வாடிக்கை அன்பர்களுக்கு
இதயம் கனிந்த புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்!
சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவை முதல் வயது வேறுபாடிற்கு ஏற்ப இரு பாலாருக்குமான றெடிமேற் உடு புடைவைகள் மற்றும் துணி வகைகளை நியாய விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள:
சீமாட்டி புடைவைக் கடல்
122, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமுறை முற்றோதல்

யாழ்ப்பாணம், ஏப். 15 வருடப் பிறப்பை முன்னிட்டுஅ கில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் இன்று திங்கட்கிழமை காலை 9மணி முதல் கந்தர் மடம் ஆத்திசூடி வீதி ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்தில் அவ்வாலய பரிபாலன சபையினரின் ஆதரவில் பன்னிருதிருமுறை முற்றோதலை நடத்தவுள்ளனர்.

(ஐ)

## கமநல சேவை நிலையம் புனரமைப்பு

அச்சுவேலி, ஏப். 14

புத்தூர் கமநல சேவை நிலையம் திருத்தி அமைக்கப் பட்டுள்ளது.

இந் நிலையம் சேதமடைந்த நிலையில் நீண்ட காலமாக இருந்து வந்ததை அடுத்து கமநல சேவை தொடர்பான அலுவல்கள் ஆவரங்காலில் உள்ள தனியார் இல்லம் ஒன்றில் நடைபெற்று வந்தன.

(ஐ-11)

## அலுவலகம் இடமாற்றம்

தென்மராட்சி ஏப். 14

சாவகச்சேரி டச்சு வீதியில் இயங்கிய தென்மராட்சி சிற்றூர்தி சேவைகள் சங்க அலுவலகம் கடந்த 10 ஆம் திகதி முதல் சாவகச்சேரி பஸ் நிலையத்தில் உள்ள கட்டடத்திற்கு இடமாற்றப் பட்டுள்ளதாக சங்கத் தலைவர் மெ. அற்புதராசா தெரிவித்தார்.

(ஐ-117)


நிர்மாணத் துறையில் மற்றுமொரு அத்தியாயம்

**கிறிஸ்ரி கொண்ஸ்றக்ஷன்**

CHRISTY CONSTRUCTION ENGINEERS & CONSTRUCTORS

(பொறியியலாளர்களும் அமைப்பாளர்களும்)

இல. 15A, 4ஆம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம்.

1) ஒப்பந்தக்காரர்கள்
2) மதிப்பீட்டாளர்கள்
3) பட வரைஞர்கள்
4) கட்டட அமைப்பாளர்கள்
5) மரவேலையாளர்கள்
6) குழாய் பொருத்துநர்கள்

நிர்மாணத் துறையில் எமது பங்களிப்புக்கு உதவி புரிகின்ற அனைத்து நிறுவனங்களுக்கும் எமது அன்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்

**எமது உளம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துகள் உரித்தாகுக**

(46311)



**அருண் கிறீம் கவுஸ்**




**மீண்டும் யாழ். நகரில்**

★ சகலவிதமான ஐஸ்கிறீம் வகைகள்
★ குளிர் பானங்கள்
மற்றும்
★ றோல், பற்றிஸ், புரியாணி

சுவையான, தரமான தேனாய் தித்திக்கும் சிற்றுண்டி வகைகளை சுவைத்திட,

நீங்கள் நாடவேண்டிய இடம்:

★ அருண் கிறீம் ஹவுஸ் ★

36, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/504)



**அன்பர்கள்! வாடிக்கையாளர்கள்! அனைவருக்கும்!**

சிற்றியின் இதயம் கனிந்த

சித்திரைப் புதுவருட நல்வாழ்த்துக்களை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன்

எங்கள்

**சிற்றியின் தங்க நாணயம் பரிசுத்திட்டம்**

இன்றுடன் பூர்த்தி அடைவதனால், இத்திட்டத்திற்கு பரிபூரண ஆதரவினை அளித்த அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்

மேற்படி தங்க நாணயம் பரிசுத்திட்ட அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விவரங்கள் 19-04-97 உதயன் பத்திரிகையில் வெளியிடப்படும் என்பதையும் அன்புடன் அறியத் தருகின்றோம்

இவ்வண்ணம்

என்றும் உங்கள் ஆதரவை நாடும்

உங்களின்

**சிற்றி காமன்ஸ் & றெக்ஸ்றைல்ஸ் என்டர் பிறைஸ்**

கிளை: இணுவில் சந்தி

திருநெல்வேலி சந்தி, திருநெல்வேலி.

(46348)



**மகாநதியின்**

அன்பர்கள் ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவர்க்கும் எமது இதயங்கனிந்த

புத்தாண்டு வாழ்த்துக்கள்

புடைவை உலகின் இன்றைய முன்னோடிகள்

**மகாநதி**

இல. 4, நவீன சந்தை, சாவகச்சேரி.

(சி/507)



**புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்**

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இதயங்கனிந்த

**புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்**

வாணிரெக்ஸ் - செல்வம் பான் ஸி

இல. 10,11, நவீன சந்தை, சாவகச்சேரி.

(சி/506)



அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்

எமது மங்களகரமான புதுவருட வாழ்த்துக்கள்

உங்கள் வானொலிகளை சரியாகப் பரிசோதித்து சிறந்த முறையில் திருத்திப் பெற்றுக்கொள்ள

நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்:

**ஸ்கைவே எலெக்றோனிக்ஸ்**

**SKYWAY ELECTRONICS**

உங்களை மகிழ்விக்க காத்திருக்கின்றோம்.

பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு.

(46245)



புதிய பலசரக்கு களஞ்சியம் மங்களகரமாக ஆரம்பித்துவைக்கப்படுகின்றது.

எமது நிறுவனம்

152, ஆஸ்பத்திரி வீதி,

S. V. M. நிறுவனம் அருகில்

யாழ்ப்பாணத்தில் இயங்கியது

தற்போது புதிய முகவரியில் இயங்குகின்றது.

**பாலகணேசன் களஞ்சியம்,**

225, ஆஸ்பத்திரி வீதி,

சத்திரச்சந்தி, யாழ்ப்பாணம்.

(46296)



வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவர்க்கும் எமது இதயம் கனிந்த

**புத்தாண்டு வாழ்த்துக்கள்**

அழகுசாதன அலங்கார அன்பளிப்புப் பொருள்கள் வாங்க சிறந்த ஸ்தாபனம் () நவநாகரிக பட்டு, பருத்தி புடைவைகளின் தெரிவுக்கு

**அஜந்தா** **அஜந்தாஸ்**

ரேட்லிமிட்டட்
66, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

றெக்ஸ்றைல்ஸ்
54, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.



எமது புதுவருட வெளியீடுகள்

பம்பாய்க் காதலி
ரம்பா, சக்கரவர்த்தி

பட்டுக்கோட்டை பெரியப்பா
விசு, லஸ்சுமி, ஆனந்தபாபு, மோகினி

**சுப்பஸோ**

(ரவி ஒலி கானம்)

100A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-501)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## புலரும் புத்தாண்டில்...

வழமை போலவே ஆண்டு ஒன்று கழிந்து புதிய வருடம் ஒன்று பிறந்திருக்கிறது. காலம் இயற்கையாகவே ஓடுகிறது; சுழன்று கொண்டிருக்கிறது. அதற்கென சில அட்டவணைகளை வகுத்துத் தொகுத்து வகைப்படுத்தி பண்டிகைகள், விழாக்களை உருவாக்கியவன் மனிதனே.

பூமியின் பல்வேறு பிரதேசங்களிலும் வாழும் மக்களின் புத்தாண்டுகள், பண்டிகைகள் மற்றும் கொண்டாட்டங்கள் வேறுபடுவதைப் பார்க்கிறோம்.

அந்தந்த நாடுகளின், மக்களின் கலாசாரங்கள் பண்பாடுகளுக்கு ஏற்பவும் விழாக் காலங்களில், கொண்டாட்டங்களில் வித்தியாசங்கள் உண்டு.

சித்திரையைப் புத்தாண்டாக வகுத்துக் கொண்டமை தமிழர்களின் இயற்கையோடு அமைந்த வாழ்க்கை முறையைப் பிரதிபலிக்கிறது. ஆண்டின் ஆரம்ப காலம் வனப்பும் எழிலும் நிறைந்து கொழிக்கும் வசந்தமாக இருப்பதால் வருடம் முழுவதிலும் செழிப்பும் சிறப்பும் ஓங்கும் என்பதில் ஐயமுண்டோ!

ஆனால் ஈழத்தமிழர்களுக்கு கடந்த பல புது வருடங்களும், சித்திரைகளும் வந்து போயினும் அவை அவர்களது வாழ்க்கையில் சிறப்பையும் சீரையும் தந்ததில்லை.

உலகத்தில் வாழும் மனிதர்களுக்குரிய அரசியல் வாழ்வியல் உரிமைகளைத் தாமும் அனுபவிக்க வேண்டும் என்ற அவர்களது நியாயமான, நீதியான ஆசை, அபிலாசை அவர்களை வேதனைகளையும், சோதனைகளையும் அனுபவிக்க வைத்துள்ளது. வாழ்வுரிமைகளைப் பெறவும் முடியாத அமைதியாக நிம்மதியாக வாழவும் இயலாத துரதிர்ஷ்டம் தொடர் கதையாகவே நீளுகிறது.

ஒவ்வொரு புத்தாண்டு பிறக்கும் போதும், இந்தத் தொடர் அவலத்துக்கும் துன்பியலுக்கும் முடிவு வாராதா என்ற மன வெதும்புதலுடனேயே அவர்கள் அதனை எதிர்கொண்டார்கள்.

இன்றைய புத்தாண்டு புலரும் பொழுதும் அதே ஏக்கமே தமிழர் மனங்களில் தேங்கிக் கிடக்கிறது. எனினும் அவர்கள் கடந்த அத்தனை இடர்மலிந்த ஆண்டுகளைப் போலவே, இம்முறையும் நம்பிக்கை உணர்வு என்ற கொழுகொம்பைப் பிடித்து நிற்க முயல்கிறார்கள். புதிய ஆண்டிலாவது தமது வேதனைகளும் அவலங்களும் நீங்கும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

தமிழர்களைப் போலவே சிங்கள மக்களுக்கும் இன்று புத்தாண்டு. தமிழர்களின் நிலையை மனிதாபிமானத்துடனும், புரிந்துணர்வோடும் அணுகி அவர்களது உரிமைகளை வழங்கி, போரை நிறுத்த வேண்டும். அதன் மூலம் சமாதானத்தையும் அமைதியையும் தோற்றுவிக்க வேண்டுமென இன்றைய நாளில் தென்னிலங்கைத் தலைவர்கள் மனத்தெளிவு பெற வேண்டும்.

புத்தாண்டுச் செய்திகளில், சமாதானம் அமைதி இன நல்லிணக்கம் என்று வேதாந்தம் பேசுவதால் எதுவுமே கைக்கு எட்டமாட்டாது. அவற்றை நாடிய உகந்த அணுகு முறையுடனான செயற்பாடு தேவை. அதற்கான புத்தாண்டு சங்கற்பத்தை சகல தரப்பினரும் செய்வராக!

# ஆனந்தமாக, நிறைவாக வாழ கோபத்தை அடக்கிப் பழகுங்கள்

ஆனந்தமான வாழ்வுக்கு ஆன்றோர்கள் பல அறக் கருத்துக்களை முன்வைத்தார்கள். இந்துக்கள் வகுத்த நல்லறங்கள் என்றும் நின்று நிலை பெறுவன. ஔவையார் என்னும் பெரும் தாய் அகிலத்தில் வாழும் மனிதருக்குச் சொன்ன அரியவை எக்காலத்துக்கும் ஏற்றவை. அம் மூதாட்டி சொன்ன ''ஆறுவது சினம்'' என்ற வாசகம் இப்புவி மாந்தர்க்கு இன்றியமையாதது. உலகின் அமைதியின்மைகளுக்கு எல்லாம் அடிப்படைக் காரணம் மனித குலம் சினத்தை அடக்காது அதனைப் பெருக்குவதே. சினத்தின் விளைவு மிகவும் பொல்லாதது. சிரித்து மகிழ்ந்து வாழ வேண்டிய மனிதர்கள் பலர் சினத்தால் பகைத்து சீரழிந்து விடுவதுண்டு. இத்துன்ப நிலை மனிதனை அணுகக் கூடாது என்பதற்காக முன்னோர்கள் இறை வழிபாட்டையும் இனிய விழாக்களையும் தோற்றுவித்துப் பேணினார்கள்.

ஒரு மனிதன் இறைவனிடம் மன்றாடிப் பெறவேண்டியவற்றில் ஒன்று சினமில்லா வாழ்வாகும். மணிவாசகர் திருவாசகத்தில் இறைவனை போற்றி நன்றி தெரிவிக்கையில் ''வேகங்கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க'' என்று தன்னை அடக்கிய இறைவனுக்கு நன்றி செலுத்துகிறார்.

சிந்தனைத் திறன் படைத்த மனிதகுலம் சினம் அடக்கப் பழக வேண்டும் ஆன்மீக நெறியில் நனைந்தவன் சினத்தை ஆற்றவும் சிறுமைகள் செய்த மனிதரை மன்னிக்கவும் தன்மை பெறுகின்றான். கோபம் வளர்க்கும் மனிதன் தானும் வெந்து மற்றவர்களையும் துன்பப் படுத்துவது கண்கூடு.

பலரது உள உடற் பிணிகளுக்கு காரணம் கோபம் என்கிறது விஞ்ஞானம். மேன்மை மிக்க வாழ்வைச் சொன்ன மெய்ஞ்ஞானம் இம்

**ஆறு. திருமுருகன்**

மைக்கும் மறுமைக்கும் நன்மை பயக்க சினத்தை அடக்க வேண்டும் என என்றோ செப்பியுள்ளது. இயற்கையாக நல்ல மனிதர்களாகிய நாம் சினம் அடக்கத் தெரியாமல் பலரைப் பகைத்

### புத்தாண்டுச் சிந்தனை

திருக்கிறோம். சில சமயம் பண்புமீறியும் நடந்தும் இருப்போம். ஆற அமர்ந்து சிந்திப்போமானால் எங்கள் ஒவ்வொருவரதும் மனமும் புனிதமடையும்.

கோபத்தால் அறிவு மயங்கும். தீய சொல்லும் தீய செயலும் தோன்றும். பிறர் வருந்துவார்கள். பகையும் பாவமும் எம்மை அச்சுறுத்தும். வேற்றுமைகளை வளர்ப்பவன் நரகத்தை சிருஷ்டி பண்ணுகிறான் என்பது ஒரு ஆன்மீகப் பெரியவரின் அமுதவாக்கு.

சினத்தை அடக்காவிட்டால் வீட்டுக்கும் துன்பம் நாட்டுக்கும் துன்பம். பாம்பின் நச்சுப்பல்லைப் பிடுங்கி விட்டால் பின்பு அதனோடு வாழலாம். அதேபோலவே மனிதனின் சினத்தை அகற்றி விட்டால் அவனோடு வாழலாம் என்ற வாசகம் ஏக காலத்துக்கும் ஏற்றது. குண்டூசியைப் படைத்து விட்டான், சந்திர மண்டலத்தை தாண்டி சாதனை யடைந்து விட்டான் என்று மனிதன் மனிதனை பெருமைப்படுத்தும் வேளை, கோபத்தை வளர்க்கக் கூடிய கொடுமைமிகு காரணங்களையும் அவன் கண்டு பிடிப்பதில் வேகமாயுள்ளான் என்பதை நினைந்து நாம் வெட்கித் தலை குனிய வேண்டும்.

உலகமே அச்சத்தில் வாழும் அவலம் பல வகைக் கோபங்களால் ஏற்பட்டுள்ளது. உலகத்தை சுற்றி வருவதற்கு முன்னர், எம்மை அண்டி நாம் சுற்றி சுத்தம் செய்வோம். கோபத்தை அடக்கத் தெரியாமல் நல்ல நட்புக்களை நல்ல மனிதர்களை நாம் இழக்காமல் இருப்பதற்கே இந்துக்கள் வணங்குவதோடும் மற்றவரோடு சேர்ந்து இன்பமாய் வாழவும் புத்தாண்டு விழாவை வகைப்படுத்தினார்கள்.

இப்புனித நாளில் எல்லோரது அன்பையும் நல்லாசியையும் உறவையும் உறுதி செய்ய பாரம்பரியமாக புத்தாண்டை புரிந்துணர்வு விழாவாக போற்றினார்கள்.

இந்த நல்ல நாளிலே கோபத்தை அடக்கி, குறைவில்லா நிறைவான மனிதர்களாக இக்குவலயத்தில் வாழ முயற்சி செய்வோமாக

'கோபத்தோடு எழுபவன் பாவத்தோடு இருக்கிறான் - பகவத்கீதை. ★

### பருவமாய்...

(மூன்றாம் பக்கத் தொடர்)

அன்றியும் இயற்கை அன்னை எப்போது பச்சை உடுத்து, காயும் கனியும் நிறைந்து, பொலிவும் திருவும் பெருகக் காணப்படுகிறளோ, அப்போது அவள் சாந்த குணத்துடன் குதூகலமாக இருப்பதாகக் கருதப்படுகிறது. அன்னையின் இந்தக் குதூகலம் மக்களையும் மன மகிழ்ச்சியடையச் செய்கிறது. ஏனெனில் இயற்கை அன்னையின் வளங்கள் அனைத்தும் மக்களுக்கானவையேயாகும்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழ எண்ணிலடங்கா இயற்கைச் செல்வங்கள் எங்களுக்காகத் தரப்பட்டிருக்கிறது. அவற்றை இனங்கண்டு, வளம் கண்டு, நலங் கண்டு, பலம் பெற்று வாழ்வது நமது ஆக்கமுயற்சியானால் தான் கைகூடுவதாகும்.

மலர்ந்துவரும் ''ஈசுர'' வருடப் புத்தாண்டு எமக்கெல்லாம், தென்பையும் தெளிவையும் தந்து, அன்பையும், ஆதரவையும் நறுமணமாகப் பரப்பி ''கருணை பூக்கவும் தீமையைக் காக்கவும் பருவமாய் நமது உள்ளம் பழுக்கவும்'' செய்ய வேண்டுமென இறையருள் வேண்டுவோமாக. ★

### துர்க்கா...

(மூன்றாம் பக்கத் தொடர்)

பிரார்த்தித்து புதுவருட வாழ்த்துக் கூறி மகிழ்கின்றேன்.

அம்பிகையின் திருவருளினால் எமது மண்ணில் அனைத்து வளங்களும் சிறக்க வேண்டுமென்றும், உண்மை, நேர்மை, தர்மம், தியாகம், பக்தி என்பன மக்கள் மனதில் இடம்பெற வேண்டுமென்றும் வேண்டி நிற்கின்றோம்.

''பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே'' என்பதைக் கருத்திற் கொண்டு வாழ்வாங்கு வாழ்வோமாக.

''சத்தியம் வெல்லும் தர்மம் தலைகாக்கும்'' என்பதை எமது நெஞ்சில் இருத்தி அமைதியும் ஆனந்தமும் அடைவோமாக!

### நல்லை ஆதீன...

(3 ஆம் பக்கத் தொடர்)

இதனையே ஞானசம்பந்தர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

மண்ணில் நல்ல வண்ணம்
வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு
யாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல்லஃதுறும்
கழுமல வளநகர்ப்
பெண்ணின் நல்லாளொடும்
பெருந்தகை யிருந்ததே

இத்திருப்பாடலின் கருவினை நெஞ்சில் இருத்தி இவ்வையகத்தில் நல்லவண்ணம் வாழ எத்தனியுங்கள். எவருக்கும் மனதினாலும் தீமை செய்ய முற்படாதீர்கள். நாம் செய்யும் தீமைகளே சேர்ந்து நமக்குத் துன்பத்தையும் நம் சந்ததிக்கு கேட்டினையும் தருகின்றன. எனவே புனிதமானவர்களாக வாழ்வதற்கு புத்தாண்டில் திடசங்கற்பம் பூணுங்கள். உங்கள் ஒவ்வொருவருக்கும் இருக்கும் கடமையை கடவுளாக மதியுங்கள். இருள் சூழ்ந்த உலகத்திலிருந்து உங்கள் இதனத்தை மீட்க இறை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். எம் முன்னோர் சொன்ன அறங்களை முழுமையாகப் பேணுங்கள். கள்ளமின்று வாழ்வை அன்பாய்க் கழியுங்கள். நாம் அனுபவித்த நல்லவற்றை மற்றவர்களும் பெற வசதி செய்புங்கள் நாம் அனுபவித்த தீமைகளைப் பிறர் அனுபவிக்கக் கூடாதென பிரார்த்தனை செய்யுங்கள். உங்களை வாழ்வித்தவர்களை, நீங்கள் வாழும் வையகத்தை நன்றியோடு நினையுங்கள்.

இத்தகைய உயர்வுதனை உதயமாகும் புத்தாண்டில் உறுதிப்படுத்தி வீராயின் அமைதி, சமாதானம் சாந்தி நிலவும். இத்திருவாழ்வு இவ்வையகத்தில் வாழ்வோருக்கு அமைய இறைவனைப் பிரார்த்தித்து எல்லோருக்கும் நல்லாசியுடன் வாழ்த்தும் கூறி அமைகிறேன். ★

## புத்தாண்டுப் பிரார்த்தனை

ஒவ்வொரு வருடமும் புத்தாண்டு பிறந்ததும் நாம் பல புதிய செயல்களை செய்யக் கருதுகிறோம். எதிர்காலம் வளம் பொருந்தி இருக்க மனதார இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்.

சற்று நிதானமாகச் சிந்தித்தால் நாம் பலவிடயங்களில் முன்னேறிக்கொண்டு வருகிறோம் மேலும் நமக்கு உயர்வும் வளமும் வாய்க்க ஆத்மார்த்தமாக பல பணிகளில் ஈடுபடப்பழகிக் கொள்ள வேண்டும்.

உடல் ரதோற்சவம் என்று சொல்லுகின்ற பொழுது இறைவன் எழுந்தருளி இருப்பதற்கு அமைந்தவாகனம் என்று கருதுகின்றோம். நமது சரீரத்தை இறைவனுக்குரிய தேவாலயமாகக்கருதி வாழ வேண்டும்.

இப்புதிய வருடத்தில் இறைவனை நமது சாரதியாக அகத்தில் இருத்திக் கொண்டு குறையிலாது வாழ்வோமாக.

சிவசிவ என்றிட சிவகதி தானே.

—சுவாமி சித்ரூபாநந்தா

## நாளை

**சித்திரை 2**

**செவ்வாய்க்கிழமை**

திதி: அட்டமி
பிற்பகல் 2. 44 வரை
நட்சத்திரம்: புனர்பூசம்
காலை: 6. 06 வரை
சுபநேரம்: 10. 34-12.04
ராகுகாலம்: 3. 04-4. 34
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## நாளைமறுதினம்

**சித்திரை 3**

**புதன்கிழமை**

திதி: நவமி
பிற்பகல் 4.27வரை;
நட்சத்திரம்: பூசம்
முற்பகல் 8. 18 வரை
ஸ்ரீ ராம நவமி
சுபநேரம்: 4. 34-6.04
ராகுகாலம்: 12.04-1.34
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## சித்திரை சித்திகள்

சித்திரை பிறந்தாள்;
சித்திகள் தருவாள்;
இத்தரை புரப்பாள்;
இன்பமே இழைப்பாள்;
புத்தொளி புணர்ப்பாள்;
பூரணம் பொதிப்பாள்;
சித்தமாய் அமைதியில்
சீர்த்திகள் சேர்ப்பாள்
நித்தியம் சாந்தியில்
நிம்மதி நிறைப்பாள்
அத்தனை இடர்களும்
அகன்றிடத் துதிப்போம்

-முருகனடியான்

## புதிய சித்திரை

பட்டு மணல் விரிப்பில் - சித்திரையே
பவளத் தேர் ஓட்டுவோம் வா!
மொட்டு வளர் நிலத்தில் - சித்திரையே
முத்துப் பந்தல் கட்டுவோம் வா!
நித்தம் மகிழ்ந்திடும் முற்றத்தில் - சித்திரையே
நிம்மதி தழைத்திட கைகளைத் தட்டு
கூத்தும் கடலாடும் பந்தில் - சித்திரையே
களிப்பு நிறைந்திட கண்களைச் சிமிட்டு
என்றும் வாழ்த்திடும், எங்களின் சித்திரையே- நாளும்
இனிமை ஒலித்திடும் ஆண்டாய் வந்திடு
அன்பும் அழகும் அரும்பிடும் சித்திரையே - நாளும்
அவலங்கள் அகன்றிட, புதிதாய் வந்திடு

வித்தியாசன்

## ஈசுர ஆண்டே, நீ வருக!

பாசுரம் உனக்குப் பாடுவேன் வருக
வேதனை தொலைந்திட விரைந்து நீ வருக
சாதனை படைத்திட மீண்டும் எழுவோம்
காடுகள் மேடுகள் கண்ணீரோடு
காலம் கழித்ததை மறந்திட முடியா
கல்வியை மறந்தோம் கடவுளை வணங்க
வேளையோ இல்லை வேதனை மலிந்தது
போன ஆண்டில் பட்டது போதும்
ஆக வேண்டிய அரும் பணி யாவும்
ஆற்றிட ஒன்று ஈசுர ஆண்டே
அன்பாய்க் கேட்பேன் அதுதான் அமைதி
சாந்தம் சகிப்பு அன்புப் பிணைவு
அரனவன் நினைப்பு தருமச் சேவை
அனைத்துமே மலிய ஆண்டே வருக
அக மகிழ்ந்திருக்க அருளுக ஆசி

வே. மாறன்இளங்கோ

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வன்னிப் பகுதிகளில் சுகாதாரப் பேரழிவு!

## செஞ். குழு அதிகாரி எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 14

"வன்னிப்பகுதியில் வைத்தியர் தட்டுப்பாட்டால் சுகாதார விடயத்தில் பேரழிவு நிலை ஒன்று எதிர்நோக்கப்படுகின்றது"

--இவ்வாறு எச்சரித்துள்ளார் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வைத்திய இணைப்பாளர் குளோடி பிலிக்.

கொழும்பில் இருந்துவெளிவரும் ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டி ஒன்றிலேயே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கிறார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

''வன்னியில் வைத்தியர்களுக்கு பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் நடமாடும் வைத்திய சேவை தவிர, வேறுவைத்தியசாலைகள் அங்கு இயங்கவில்லை.

''மலேரியா நோய் அங்கு தீவிரமாகப் பரவி வருகிறது. ஆனால் அந்த நோயைத் தடுக்கும் 'குளோறா குயீன்' குளிகைகள் இல்லை.

''வன்னிக்கு மருந்துஅனுப்புவதில் பெரும் கஷ்டம் நிலவுகிறது ஒரு குளிகை எடுத்துச் செல்லவேண்டுமானாலும் கூட பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி பெறவேண்டிய பரிதாப நிலை நிலவுகிறது''—என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(உ-3-150)

# தீர்வு யோசனைகள் குறித்து ரணில் - தமிழ்க் கட்சிகள் பேச்சு

## முக்கிய சந்திப்பு மே ஆறாம் திகதி

கொழும்பு, ஏப். 14

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அரசு முன் வைத்திருக்கும் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளின் முக்கிய விடயங்கள் குறித்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் எதிர்வரும் ஆறாம் திகதி கொழும்பில் பேச்சு நடத்துவர்.

அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளில் இடம்பெற்றிருக்கும் காணி, பொலீஸ், வடக்கு-கிழக்கு இணைப்பு, அதிகாரப் பரவலாக்கல் அலகு ஆகிய முக்கிய விடயங்கள் குறித்தே ஆறாம் திகதி நடைபெறும் பேச்சுக்களில் ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயங்கள் தவிர்ந்த ஏனைய அம்சங்கள் குறித்து ஐ.தே.கவுக்கும், தமிழ்க்கட்சிகளுக்கும் இடையில் அண்மையில் நடந்து முடிந்த பேச்சுக்களில் ஏற்கனவே இணக்கம் காணப்பட்டு விட்டதாகவும்—

6 ஆம் திகதி இடம்பெறும் பேச்சுக்கள் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் கருதப்படுவதாகவும் —

கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இப் பேச்சுக்களில் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ பி. டி.பி., இ.தொ.கா., முஸ்லிம் காங்கிரஸ், புளொட் ஆகியன பங்குபற்றுகின்றன.

## கடற்படையின்...

(முதலாம் பக்கத் தொடர்)

பட்ட 3 படகுகளையும், மூன்று அதிவேக ரோந்து படகுகளையும், தரையிலும், கடலிலும் போகக் கூடிய கப்பல்களையும் 3 நாடுகளில் இருந்து கொள்வனவு செய்வது குறித்து பேச்சுக்கள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு டொக்யாட் நிறுவனத்தில் 9 அதிவேக படகுகள் தயாராகுகின்றன. இவற்றில் ஒன்று வருட நடுப்பகுதியில் சேவைக்கு வரும். எஞ்சியவை ஒருவருடத்தில் கிடைக்கும்.

தற்சமயம் கடற்படையினரிடம் 100 கலங்கள் உள்ளன. அவற்றில் 26 அதிவேகத்தாக்குதல் படகுகளாகும்.

கடற்படை முழுமையாக செயற்பட வேண்டுமானால் முந்நூறு கலங்களாவது கடற்படைக்குத் தேவை.

புலிகளின் தளங்களை தாக்கி அழிக்க 'விசேட படகுப் படையணி' ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

கடற்படையில் இருந்து கடந்த டிசம்பர்மாதம் வரை 475 படையினர் ஓடிவிட்டார்கள். தற்போது தப்பியோடியோர் எண்ணிக்கைகுறைந்து வருகிறது.

கொழும்புத் துறைமுகத்தின் மீது நீருக்கு கீழாக வந்து தாக்குதல் நடத்துவதைத் தடுக்க புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

தென் பகுதியில் யால சரணாலயத்துக்குள் புலிகள் ஊடுருவுவதைத் தடுக்கும் வகையில் தென் பகுதியில் கடற்படைத்தளம் ஒன்று அமைக்கப்படவிருக்கிறது. கடற்படையினர் முகாம் அமைத்த பின்பே முகாம் அமையும் இடம்பற்றி தெரிவிக்க முடியும்.

வவுனியா — கிளிநோச்சி தரைப்பாதை திறக்கப்படும் வரை வடபகுதியில் உள்ள படையினருக்கு கடல் வழியாகவே — திருமலை, காங்கேசன்துறை ஊடாக —விநியோகம் மேற்கொள்ளப்படும்.

பூநகரியில் முன்னர் அமைந்திருந்த நாகதேவன் துறை கடற்படைத்தளம் மீண்டும் அங்கு அமைக்கப்பட மாட்டாது. கிளாலி நீரேரி ஊடாக பயணம் மேற்கொள்ளப்படும் போதே அந்த முகாம் தேவைப்பட்டது — என்றார் அவர்.

(உ-3-150)

## திடீர்..

(முதலாம் பக்கத் தொடர்)

திடீர்த் தேர்தல் குறித்து ஜனாதிபதி பொலீஸ் மா அதிபர் ரி. டபிள்யூ. ராஜகுருவுடன் ஆராய்ந்ததாகவும் —

அதன்பின் பொலீஸ் மா அதிபர் பிரதிப் பொலீஸ் அதிபருக்கு தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணிப்புரை விடுத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

அனைவருக்கும் எமது புதுவருட நல்வாழ்த்துக்கள்!

**YOGI HOME SCIENCE ACADEMY**

புதிய வகுப்புகள்

★ இலகுமுறை தையல் (மெசின் எம்ரோய்டரி உட்பட) ★ கேக் ஐசிங்
★ மாச்சினி மலர்கள் ★ மேலைத்தேய ஐசிங் அலங்காரங்கள்
★ சமையற்கலை ★ நவீன முக ஒப்பனைகளும் தலை அலங்காரமும்
★ துணியில் வர்ண அலங்கரிப்பு (Fabric Painting)

குறிப்பு: பருத்தித்துறையிலும் புதிய வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

தொடர்பு:

யாழ். நகரில்:
75, அம்மன் றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)

வடமராட்சியில்:
"பொன்மொழியார்கம்"
வதிரி, கரவெட்டி.
([illegible] அருகில்)

(46365)

# இனத்துவேஷிகளை களைவதில் பொ. ஐ. மு., ஐ. தே. க. தீவிரம்

கொழும்பு, ஏப். 14

இனத்துவேஷம் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களை வெளியேற்றும் நடவடிக்கையில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும். ஐ தே. கவும் ஆரம்பித்துள்ளன என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது.

அண்மையில் அலரிமாளிகையில் நடந்த பொது மக்கள் ஐக்கிய முன்னணி எம். பிக்களின் கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இனத்துவேஷம் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னணியில் இருந்து நீக்கப்படுவர் என்று கூறியுள்ளார்.

இதேபோன்று ஐ தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தமது உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றுகையில் —

இன, மத குரோதங்களைத் தூண்டும் வகையில் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சியில் இருந்து விலக்கப்படுவர் என எச்சரித்துள்ளார்.

இதற்கான நடவடிக்கை அடுத்த மாதம் ஆரம்பமாகும் எனக்குறிப்பிட்ட அவர் அது ஆறு மாதகாலத்தில் பூர்த்தியாகும் என்றும் தெரிவித்தார்.

(உ-3-150)

# இஸ்ரேலுடன் உறவு வைக்க பின்னடிக்கிறது ஸ்ரீலங்கா

கொழும்பு, ஏப். 14

இஸ்ரேலுடன் ராஜதந்திர உறவுகள் வைத்துக்கொள்வதை இலங்கை அரசாங்கம் காலவரையின்றி பிற்போட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

அரபு — இஸ்ரேல் சமாதான ஒப்பந்தத்துக்கு குந்தகம் ஏற்படுத்தும் விதத்தில் ஜெருசலத்தில்இஸ்ரேல் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் காரணமாகவும்—

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த பாலஸ்தீனத் தலைவர் யாஸிர் அரபாத் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் நடத்திய பேச்சு காரணமாகவும் —

இந்த முடிவை இலங்கை அரசாங்கம் எடுத்துள்ளதாக கொழும்புத் தகவல் தெரிவித்தன.

(உ-3-150)

## தரைப்பாதை ..

(முதலாம் பக்கத் தொடர்)

வடிக்கைத் திட்டம் பரிசீலனைக்கும், ஆலோசனைக்கும், அங்கீகாரத்துக்குமாக அவரிடம் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

### விமானக் கொள்வனவு பிற்போடப்பட்டது

வவுனியா — கிளிநொச்சி இராணுவ நடவடிக்கை முடியும் வரை விமானப்படைக்கு புதிய விமானங்களைக்கொள்வனவு செய்வது பிற்போடப்பட்டுள்ளதாக அதி உயர் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கிளிநொச்சி — வவுனியா பாதை திறக்கப்பட்ட பின்னரே விமானப்படைக்கு என்ன ரகமான விமானம் தேவை என்பது குறித்து முடிவு செய்யப்படும். தற்போதைய செலவினங்களைக் குறைக்கவும் இந்தமுடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

கிளிநொச்சிக்கான தரைப்பாதை திறந்தபின்பே வடக்கு — கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்த வேண்டும் என்று ஆலோசிக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

இப்பாதை திறப்பதில் வேறும் பல நோக்கங்கள் உள்ளன. ஆனால் அவற்றை இப்போது வெளியிட முடியாது என்றும் அவர் கூறினார்.

### தாக்குதலுக்கு புலிகள் தயாராகுகின்றனர்

வன்னியில் இருந்து வவுனியா வரும் பயணிகளிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களில் இருந்து, புலிகள் அடுத்த தாக்குதல் ஒன்றுக்கு தயாராவதாகத் தெரிய வந்துள்ளது.

வவுனியா — கிளிநொச்சி பாதையில் புலிகள் பதுங்குகுழிகளை அமைக்கிறார்கள்; கண்ணிவெடிகளைப் புதைக்கின்றார்கள்.

வவுனியா — கிளிநொச்சி தரைவழிப் பாதையைத் திறப்பதைத் தாமதப்படுத்த புலிகள் முயற்சிக்கிறார்கள். இப்பாதை திறக்கப்பட்டால் வன்னியின் கிழக்குப் பகுதியில் புலிகள் முடக்கப்பட்டு விடுவார்கள் எனக் கருதப்படுகிறது.

இதைத் தடுப்பதற்காகவே புலிகள் பல நடவடிக்கைகளுக்கு திட்டமிட்டுள்ளார்கள் என்று தகவல் கிடைத்துள்ளது — இப்படி கொழும்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(உ-3-150)

# ஆயுதத் தேவை குறித்து அறிக்கை

கொழும்பு, ஏப். 14

இராணுவத்தினருக்கு தேவையான ஆயுதத் தளபாடங்கள் மற்றும் நவீன உபகரணங்கள் தொடர்பாக இராணுவ தலைமைப்பீடம் பாதுகாப்பு அமைச்சிடம் இரகசிய அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையை பாதுகாப்பு அமைச்சு ஆராய்ந்து வருகின்றது. மேலும் பாதுகாப்புக் காரணங்களுக்காக அதன் விவரம் வெளியிடப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-3-150)

# இந்தியர்கள் இருவர் பலி

புதுடில்லி, ஏப். 14

எல்லைக்கு அப்பாலிருந்து பாகிஸ்தானியப் படையினர் நடத்திய தாக்குதலில் இருவர் உயிரிழந்தனர் என்றும் 8 பேர் காயமடைந்தனர் என்றும் இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாகிஸ்தானியப் படைகளின் பீரங்கித் தாக்குதலை அடுத்து எல்லைக் கிராமம் ஒன்றில் இருந்து மக்கள் பெருமளவில் வெளியேறிவிட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஏப்ரல் 19...

(முதலாம் பக்கத் தொடர்)

கையை ஆரம்பித்த முதலாவது ஆண்டு பூர்த்தி தினம்

— ஆகிய முக்கிய மூன்று தினங்கள் எதிர்வரும் 19ஆம் திகதி வருகின்றது. அவற்றை ஒட்டியே பெரும் தாக்குதல் ஒன்றை நடத்த புலிகள்திட்டமிட்டிருப்பதாகக் கருதப்படுகின்றது.

மன்னார் —வவுனியா வீதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள முகாம்கள் மீது அல்லது திருகோணமலை எல்லைப்பகுதியில் அமைந்துள்ள கொக்கிளாய் இராணுவ முகாம் மீது புலிகள் இத்தாக்குதலை நடத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் தகவல்களைத் தொடர்ந்து மன்னார் — வவுனியா வீதியில் உள்ள முகாம்களின் படையினரும், கொக்கிளாய் முகாம் படையினரும் கடந்த புதன்கிழமைதொடக்கம் அதி உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(உ-3-150)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

போதனா நூலகம்
யாழ்ப்பாணம்

# பேச்சு பற்றி இன்னும் முடிவு எடுக்கவில்லை!

## அமைச்சர் பீரிஸ் தகவல்

கொழும்பு, ஏப்ரல் 14

"விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்துவது தொடர்பாக அரசாங்கம் இன்னமும் முடிவு எதனையும் எடுக்கவில்லை."

--நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த 3 அடிப்படை நிபந்தனைகள் உள்ளன. அவற்றில் இன்னமும் மாற்றம் ஏற்படவில்லை.

★ ஆயுதங்களை கீழே வைக்க வேண்டும்.

★ அரசியல் அம்சம் குறித்து பேச இணங்க வேண்டும்.

★ கால அட்டவணை வகுத்துப் பேச வேண்டும்.

— இந்த மூன்று நிபந்தனைகளையும் அரசு இன்னமும் கைவிடவில்லை.

இப்போது 'பந்து' புலிகள் பக்கமே உள்ளது. எதிர்காலத்தில் பேச்சு நடத்துவது குறித்து அரசாங்கம் இன்னும் முடிவு செய்யவில்லை. அது இராணுவ நலனுக்கு பாதகமாக அமைந்து விடும்.

பிரிட்டிஷ் அரசும் இன்னமும் புலிகளுடன் பேசவில்லை. புலிகளுடன் பேச்சு நடத்தும்படி இலங்கை அரசாங்கம் பிரிட்டிஷ் அரசிடம் இன்னும் கேட்கவில்லை. பிரிட்டிஷ் அரசும் தன் விருப்பப்படி விடுதலைப் புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்கவில்லை.

பிரிட்டிஷ் இந்த விடயத்தில் தலையிட்டமைக்காக இந்தியா அதிருப்தி கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. நாம் இங்குள்ள நிலைமையை அவ்வப்போது இந்தியாவுக்கு அறிவித்துக் கொண்டிருக்கிறோம். இந்தியா பெறுமதியான ஆலோசனைகளை எமக்கு வழங்கி வருகிறது,—என்றார்.

# அரசு-புலிகள் பேச்சின்போது இடம்பெறவுள்ள விடயங்கள்

## தெரிவுக்குழு அடையாளம் கண்டுள்ளதாம்

கொழும்பு, ஏப். 14

விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் இடம்பெறக் கூடிய பேச்சுக்களின் போது—

★ அரசமைப்பு சீர் திருத்தம்.

★ அதிகாரப்பரவலாக்கல்.

★ வடக்கு — கிழக்கு இணைப்பு.

★ புனர்வாழ்வுப்பணிகள்.

★ துருப்புக்களின் நடமாட்டம் அமையும் விதம்.

★ விடுதலைப் புலிகளின் பகுதிகளுக்கு உணவுப் பொருள்கள் அனுப்புதல்.

— ஆகிய விடயங்களும் இடம்பெற வேண்டும்.

அரசமைப்பு சீர்திருத்தம் குறித்து ஆராயும் நாடாளு மன்றத் தெரிவுக் குழுவில் மேற்கண்ட இணக்கம் ஏற்பட்டிருப்பதாக கொழும்பில் இருந்து வெளிவரும் 'சண்டே ரைம்ஸ்' ஆங்கில வார இதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

பேச்சுக்களின் முன்னேற்றம் குறித்து அவ்வப்போது நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்றும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இணக்கம் காணப்பட்டுள்ளதாக அப்பத்திரிகை மேலும் தகவல் வெளியிட்டது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு மீண்டும் அடுத்த மாதம் 15ஆம் திகதி கூடவிருக்கிறது.

(உ-3-150)

## சமய சந்திகளில்

பருத்தித்துறை தம்பசெட்டி பண்டாரி அம்மன் கோயில் வருடாந்த பொங்கல் உற்சவம் புத்தாண்டு தினமான இன்று இரவு ஆரம்பமாகி நாளை காலை முடிவடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-118)

## பலாலி மாநாட்டில் பிரதேச செயலர்கள்

யாழ்ப்பாணம், ஏப். 14

யாழ். மாவட்டத்தின் நிலைமை குறித்து ஆராய எதிர்வரும் வியாழக்கிழமை பலாலியில் உயர்மட்ட மாநாடு ஒன்று இடம்பெறவிருக்கிறது.

இம்மாநாட்டுக்கு சகல பிரதேச செயலர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இம்மாநாட்டில் பங்குபற்றுவதற்காக அன்று காலை 9 மணிக்கு யாழ். செயலகத்துக்கு அனைத்துப் பிரதேச செயலகர்களை வரும்படியும்—

போக்குவரத்து ஏற்பாடு செய்து தரப்படும் என்றும்— அரச அதிபர் தெரிவித்துள்ளார். (உ-3)

## அலுவலகம் திறப்பு

புலோலியில் ஈழ ம்க்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டீ.பியின் அலுவலகம் ஒன்று கந்தமுருகேசனார் சிலைக்கு அருகாமையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இது வரை பதிவு செய்யாத தொண்டர் ஆசிரியர்கள் இங்கு பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-118)

# வால்நட்சத்திரம் தென்படுவதால் நாடெங்கும் போராட்டம் தீவிரமாகும்

கொழும்பு, ஏப் 14

'ஹெல் பொப்' வால் நட்சத்திரம் இலங்கையில் தென்படுவதால் ஏற்படும் பலனால் ஆயுதப் போராட்டம் நாடு முழுவதும் பரவும் நிலை உருவாகும். சர்வதேச விஞ்ஞான சோதிட ஆராய்ச்சி நிலையத் தலைவர் எஸ். எம். சந்திரசிறி இவ்வாறு ஆரூடம் தெரிவித்துள்ளார்.

இந்தப் பலன் எதிர்வரும் ஒக்டோபர் 28 ஆம் திகதி முதல் தெரியவரும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி அடையும் என்றும்—

வெளிநாட்டு உதவிகள் குறையும் என்றும்—

அரசியல் தலைமைத்துவத்தில் மாற்றம் காணப்படலாம் என்றும்— அவர் ஆரூடம் தெரிவித்துள்ளார். (உ-15ப-3)

# படை வாபஸ் நிபந்தனையை அரசுத்தரப்பு ஏற்கக்கூடாது!

## இராணுவ வட்டாரங்கள் வற்புறுத்து

கொழும்பு, ஏப். 14

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சு நடக்கும் போது படையினர் கைப்பற்றிய பகுதிகளில் இருந்து வாபஸ் பெற வேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் நிபந்தனையை ஏற்கக் கூடாது என்று சிரேஷ்ட இராணுவ வட்டாரங்கள் தெரிவித்ததாக 'சண்டே லீடர்" தகவல் வெளியிட்டுள்ளது.

பல நிபந்தனைகளின் கீழ் தான் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தவேண்டும் என்று கூறும் அந்த இராணுவ வட்டாரங்கள், பிரதானமான நிபந்தனையாக ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என்று கேட்கப்பட வேண்டும் எனக் கூறியுள்ளன. (உ-3-150)

---

## புத்தாண்டுச் செய்திகள்

## ஈ. பி. டி. பி. தலைவர்

இன்று பிறக்கும் புத்தாண்டை ஒட்டி ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர்நாயகமும், யாழ். மாவட்ட எம்.பியுமான டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள செய்தி வருமாறு:-

மலரும் சித்திரைப் புத்தாண்டில் இனிய சமாதானம் முத்திரை பதிக்க வரவேண்டும் என்பதே எமது மக்களின் எதிர்பார்ப்பாகும்.

ஆயிரமாயிரம் இன்னுயிர்களை இழந்து கண்ணீராலும் செந்நீராலும் கலங்கி சோகமாகி நிற்கும் எம் மண்ணில் மீண்டும் சமாதானத் தென்றல் வீச வேண்டும்.

எனினும் மலரும் சமாதானம் நேர்மையான சமாதானமாக — எமது மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவு செய்யக் கூடிய அரசியல் தீர்வின் அடிப்படையிலான சமாதானமாக — இருக்க வேண்டும் என்பதே ஈ. பி. டி.பியின் நிலைப்பாடாகும்.

இன சமத்துவம், ஜனநாயகம் என்ற உயரிய அடித்தளங்கள் மீதுதான் நிரந்தர சமாதானம் கட்டி எழுப்பப்பட முடியும்.

அத்தகைய சமாதானத்தை நீதியான அரசியல்தீர்வு மூலம் கட்டி எழுப்ப உழைப்போம்; மக்கள் பக்கம் நிற்போம் என்ற உறுதியினை இப் புத்தாண்டுத் தினத்தில் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மக்களின் அன்றாட வாழ்க்கையை மேம்படுத்தும் அதே வேளையில் மக்களின் அரசியல் அபிலாஷைகளை வென்றெடுக்க நீதியான அரசியல் தீர்வுக்காகப் போராடும் கடமையையும் மறவாதிருப்போம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3)

## யாழ். அரச அதிபர்

புத்தாண்டை ஒட்டி யாழ். அரச அதிபர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்ப்பாணத்துக்கு மக்கள் திரும்பி கஷ்டமான சூழ்நிலையில், ஒருவருடம் பூர்த்தியாகும் நிலையில் புதுவருடம் பிறக்கின்றது.

இந்நிலையில் இயல்பு வாழ்க்கை தோன்றவும் மக்கள் மீளக் குடியேறவும் உதவியவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

மக்கள் வாழ்வு சுபீட்சம் பெற எதிர்காலத்தில் ஒத்துழைப்பு வழங்கும்படி இப்புத்தாண்டு நாளில் சகலரையும் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த வருடம் இடம் பெயர்வின் போது புத்தாண்டைக் கொண்டாடிய எம்மக்களின் உடன்பிறப்புக்கள் இன்னமும் வன்னியில் இன்னல்படும் போது குடாநாடு திரும்பியோர் தமது சொந்த வீட்டில் புத்தாண்டை அனுஷ்டிக்கின்றார்கள்.

அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக!

— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

---

கடந்த சில வாரங்களாக

## நயினாதீவு - குறிகாட்டுவான் படகுச் சேவை நிறுத்தம்

தென்மராட்சி, ஏப். 14

நயினாதீவில் கடந்த மாதம் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றைத் தொடர்ந்து நயினாதீவு—குறிகாட்டுவான் பயணிகள் படகுச் சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

நயினாதீவுப் பயணிகள் ஊர்காவற்றுறையூடாகவே தமது பயணங்களை மேற்கொள்கின்றனர். நெடுந்தீவு பயணிகள் மட்டும் குறிகாட்டுவான் ஊடாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் நடைபெற்ற நயினாதீவு — ஊர்காவற்றுறை பயணிகள் படகுச் சேவை தற்போது ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் நடைபெறுகிறது. முன்னர் இப் பயணிகள் படகில் அனலைதீவு, எழுவைதீவு பகுதி மக்களும் ஏற்றிச் செல்லப்பட்டனர். தற்போது திங்கள், வெள்ளி ஆகிய தினங்களில் மட்டும் அரச ஊழியர்களுக்கான இப் படகு அனலைதீவுக்கும் எழுவைதீவுக்கும் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபரினால் பயணிகள் படகுகளுக்கு வழங்கப்படும் டீசலின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதையடுத்து படகுகளின் பயணக் கட்டணமும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

(ஐ-117)

அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது

**புத்தாண்டு வாழ்த்துக்கள்**

எங்களிடம்:-

வெங்காயம், கிழங்கு, மரக்கறி வகைகள்
பொதி செய்யக் கூடிய காற்றோட்டமுள்ள
நெற் பை (Bag)
தும்புத் தடி, ஈர்க்குத்தடி, பிரஸ் உற்பத்தி செய்யக் கூடிய தடி

மற்றும்

★ மளிகைப் பொருள்கள் ★ மாட்டுத் தீன்
★ கோழித் தீன் ★ சிமெந்து

பான்சிப் பொருள்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள:


**சிவகுமார் களஞ்சியம்**

**நியூ நாதன் ரேடர்ஸ்,**

213 C, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

[46368]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# லாவண்யா



## பல், மூக்குக் கண்ணாடி அகம்

சிறந்த முறையில் பல் கட்டுவதற்கும், மூக்குக் கண்ணாடிகளைப் பெறுவதற்கும்

**லாவண்யாவிற்கு வாருங்கள்**

செவ்வாய், வியாழன், சனிக்கிழமைகளில் யாழ். வீதி,
(மகாத்மா தியேட்டர் அருகில்)
காலை 8-00 மணி முதல் 12-00 மணி வரை

**நெல்லியடி (கிளை)**

ஞாயிறு தவிர்ந்த எல்லா நாள்களிலும் பஸ் நிலையம் முன்பாக
**மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.**

**டாக்டர் றெஜி சொலமன்**

---


**இனிய தமிழ் புத்தாண்டில்**
**சமாதானமும் சுபீட்சமும் மலரட்டும்!**

**"விழி உங்களிடம் அதன் ஒளி எங்களிடம்"**

## எரிக்கணேஷ்

மூக்குக் கண்ணாடி விற்பனையாளர்.

இறக்குமதி செய்யப்பட்ட அழகிய பிறேம் களும் போட்டோகிறே, போட்டோ பிற வுண் கண்ணாடிகளும் நீங்கள் தெரிவு செய்து அதே நாளில் பெற்றுக் கொள்ள உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.



## எரிக்கணேஷ்

**வண்ணை-வட-மேற்கு,**
**பொன்னையா லேன்,**
**ஆனைக்கோட்டை.**
566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

---

# BASF

யாழ். விவசாய நண்பர்களுக்கு இதயம் கனிந்த

## புதுவருட வாழ்த்துக்கள்!

ஜேர்மனியின் **BASF** நிறுவனத்தின் விவசாய
இரசாயனங்களான பீடைகொல்லிகள்

தற்பொழுது கொழும்பிலிருந்து புதிதாக தருவிக்கப்பட்டு குடாநாட்டின் சகல விவசாய இரசாயன விற்பனை நிலையங்களிலும் விற்பனையாகின்றன.

**விநியோகஸ்தர்:**

**கமக்காரர் மாளிகை**
சுன்னாகம் கிளை: திருநெல்வேலி

**BASF - FINLAY (PVT.) LTD.**
**186, VAUXHALL STREET, COLOMBO - 2**

பீடை கொல்லிகள் அபாயகரமானவை, அவதானமாகப் பாவியுங்கள்

---

**இனிய தமிழ் புதுவருட வாழ்த்துக்கள்!**



பி. ஜெ.
பர்னான்டோ



முக அமைப்பிற்கு ஏற்றவாறு மூக்குக் கண்ணாடிகளை தெரிவு செய்வதற்கும் சிறந்த முறையில் பற்களைக் கட்டிக் கொள்வதற்கும் நீண்டகால அனுபவமுள்ளவர்கள் உங்கள் கண்களை சரியான முறையில் பரிசோதித்து மூக்குக் கண்ணாடிகளை பெற்றுக் கொள்ள நாடவேண்டியவர்கள்:

## பி. ஜெ. பர்னான்டோ

**மூக்குக் கண்ணாடியகமும்**
**பல்கட்டும் நிலையமும்**
**542, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

---

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் உளங்கனிந்த

## TASTY யின் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

**TASTY தயாரிப்புக்களான**

★ சோடா ★ சோஸ்
★ ஊறுகாய் ★ கோடியல்

என்பன புதிய ஆண்டில் புதிய பொலிவுடன் வெளிவருகின்றன.

அத்துடன் நெல்லிரசம், ஜாம் என்பன இப்பொழுது யாழ். குடா எங்கும் தாராளமாக விற்பனை யாகிறது.

**TASTE Line Industries (pvt.) Ltd.**
**ஆடிய பாதம் வீதி,**
**திருநெல்வேலி.**

(46330)

---

உ
ஸ்ரீராமஜெயம்

## ஈசுர புத்தாண்டு வாழ்த்துக்கள்

சைவநெறித்திரு ஆன்மீக நேயச் செல்வர்கட்கும்
மற்றும் அபிமானிகட்கும் நண்பர்கட்கும்
ஆலய தொண்டர்கட்கும் எனது
ஜீவனோபாயத்திற்கு உதவிப் பணிபுரிந்த
ஏனையோர்க்கும் இறைவன்பால் புதுவருட
நல்வாழ்த்துக்கள் தெரிவிக்கிறோம்.
நன்றி வணக்கம்

அன்பர் ஷர்மாஜி
**வைரவேஸ்வரம் சந்நிதானம்.**
(46329) **இளவாலை.**

---

## எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

வீடியோ படம் பிடித்திடவும், அழகிய வேலைப்பாடுகள் அமைந்த சொக்கட்டான் மணப்பந்தல் அமைத்திடவும் நாடுங்கள்:

## வீடியோ கலா மினி

அச்சுவேலி.

தொடர்புகளுக்கு யாழ்நகரில்:-
**கல்யாணி,**
பஸ் நிலையம் முன்பாக,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(46266)

---

## புது வருட வாழ்த்துக்கள்

அன்பர்கள் ஆதரவாளர்கட்கும் இன்று தேர்த்திரு விழா கொண்டாடும் கொல்லங்கிராய் வீரகத்தி விநாயகர் அருள்வேண்டி புது வருட வாழ்த்து தெரிவிக்கிறோம்.

## வீடியோ வைஷ்ணவி

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

(46350)

---

"அன்பான வாடிக்கையாளர்களுக்கு
எமது உளம் கனிந்த

## புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

புத்தாண்டை முன்னிட்டு வங்கி
**இன்று மதியம் 12 மணி முதல் 3 மணி வரை**
வாடிக்கையாளர்களுக்காகத் திறக்கப்படும்.
நாளை (15-4-97) விசேட வங்கி விடுமுறையாகும்.

**என்றும் உங்கள் சேவையில்**

COMMERCIAL BANK

கொமர்ஷல் வங்கி

[சி/493]

---

**வாடிக்கையாளர்களுக்கு எமது இனிய**

## புத்தாண்டு வாழ்த்துக்கள்

உரித்தாகுக.

**மீண்டும் யாழ். நகரில்**

மங்கள நிகழ்வுகளை நவீன தொழில் நுட்பக் கருவிகள் மூலம் வீடியோ படம் பிடித்திடவும் வர்ணப் புகைப்படங்கள் பிடித்திடவும்:

## ★ அரவிந் ★

## ARAVINTH

**வீடியோ புகைப்படச் சேவை**
**326, நாவலர் வீதி,**
**ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.**

(46330)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

''அரி ஓம் நாராயணாயரும்''

## ஸ்ரீநாகவரத நாராயணர்
### தேவஸ்தானம்
### நாகேஸ்வரம் - அளவெட்டி
## ஸ்ரீராமநவமி யாகமும் திருவிழாவும்

மேற்படி நிகழ்ச்சிகள் **1997 - 04 - 16ஆம்** திகதி புதன்கிழமை காலை 8-00 மணி தொடக்கம்- நாட்டு மக்களின் நலன் வேண்டி நடைபெறும். அன்பர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**பொறுப்புரிமை பரிபாலன சபை**

[46302]


## புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகள்

கொழும்புத்துறை, ஏப். 14

கொழும்புத்துறை சனசமூக நிலையத்தின் புதுவருட தின விளையாட்டுப் போட்டிகள் இன்று மாலை 3 மணி முதல் நிலையத் தலைவர் திரு. செ. இராசரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

(ஐ-30)

## மின்னல் தாக்கி எருது பலி

யாழ்ப்பாணம், ஏப். 14

இடிமின்னல் தாக்கியதினால் எருது மாடு ஒன்று உயிரிழந்துள்ளது. அருகில் இருந்த தென்னை மரமொன்று எரிந்து சாம்பரானது.

புத்தூர் கிழக்கு கிழுவோரைப்பகுதியில் நேற்று முன்தினம் இச் சம்பவம் இடம் பெற்றது. (ஐ-15)

## ஒரு தொகுதி முத்திரை வந்தது

யாழ்ப்பாணம். ஏப். 14

குடாநாட்டில் உள்ள ஆறு தபாலகங்களுக்கு விமான மூலம் முத்திரைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி, சுண்டுக்குளி, கொக்குவில், சுன்னாகம் மானிப்பாய், வட்டுக்கோட்டை ஆகிய 6 தபாலகங்களுக்கே இம்முத்திரைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

2 ரூபாவில் இருந்து 20 ரூபா வரையிலான முத்திரைகள் இதில் அடங்கும்.

(ஐ-15)


## சாவகச்சேரி லயன்ஸ் கழகம்

எமது செயற்திட்டங்களுக்கு மனமுவந்துதவும் பெருந்தகைகள், வர்த்தகர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது

**இதயபூர்வ**
**புத்தாண்டு இனிய வாழ்த்துக்கள்**

கழகத்தினால் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளின் இறுதி நிகழ்வுகளும் பரிசில்கள் வழங்கலும் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும்.


அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**சாவகச்சேரி லயன்ஸ் கழகம்**

குறிப்பு:
பாவிக்காத நிலையில் உள்ள மூக்குக்கண்ணாடிகளை மனமுவந்து எம்மிடம் வழங்கி ஏனையோரும் பார்வை பெற உதவுங்கள்

(சி/ 508)


## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 19 — 11 — 1931

உதிர்வு: 25 — 04 — 1996

### அமரர் விசுவர் கந்தையா

திதி: **15 - 04 - 1997**

உள்ளம் உருகுது உங்களை நினைக்கையிலே!
கண்கள் தேடுது உமது கருணை முகம் எங்கேயென்று!
உன்னைப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் - தந்தையே
ஒருகோடி யுகம் போனது போன்ற உணர்வு
எங்களுக்கு
எத்தனை யுகம் போனாலும் உமது நினைவு
எங்களைவிட்டு அகலாது!
எங்கள் உயிர்த் துடிப்போ உமது நினைவலைகளில்
தான்
தந்தையே! இம் மண்ணும் விண்ணும் உள்ளவரை
எமக்காக நீர் வாழ்ந்தது போல் உமது நினைவை
உள்ளத்தில் வைத்து உருகிக் கொண்டிருக்கிறோம்!

உமது பிரிவால் துயருறும்:
மனைவி: க. இராசகிளி,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சூசையப்பர் கோயிலடி,
கோப்பாய் வடக்கு.

(சி/467)


## A/L 98, 99

வர்த். - திரு. பசில்
பொரு. - திரு. இராஜேஸ்வரன்
புள்ளி. - திரு. தவசேகர்
கண. - திரு. பாலவாசன்

A/L 97 நடைபெறுகின்றது.

**SHAMROCK**

யா, ஈச்சமோட்டை வீதி,

(46355)


## 30 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 27 — 08 — 1914 மாகியப்பிட்டி



உதிர்வு: 16 — 03 — 1997 பூநகரி

### அமரர் சிதம்பரப்பிள்ளை கதிரவேலு

(சங்குவேலி)

எத்தனை நினைவுகள் உள்ளத்தில்
அவை இன்று நிறைவேறும் வேளையில்
உங்களை இழந்தோம் - மனம் துடித்தோம்
அழவில்லை - கண்ணீரை விழிகளிலே
நிறைத்து விட்டு
அணையா ஜோதியென
ஒளியேற்றிச் சென்றீரோ?
நாள்கள் 30 ஆனாலும் ஆறவில்லை என்றும்
எம் துயரம் மறக்காது - உங்கள்
இனிய முகமும் கனிந்த பேச்சும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல மருதடி
விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பான மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

தகவல்:
வே. கந்தசாமி,
சங்குவேலி.

(9415)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 01 — 08 — 1935

இறப்பு: 15 — 03 — 1997

### அமரர் அப்பச்சி மகாலிங்கம்

(ஓய்வு பெற்ற அதிபர் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை)

**திதி: 14 - 04 - 1997**

அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய் பாசத்தின் பிறப்பிடமாய் வாழ்ந்து எங்களுக்கு வழிகாட்டியாய் இருந்த எங்கள் அன்புத்தந்தையே! உங்கள் நினைவுகள் என்றென்றும் எம் நெஞ்சத்தை விட்டகலா.
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சின்னப்பா வீதி,
நவாலி கிழக்கு,
மானிப்பாய்.

(46325)


## நவீன மருத்துவமனை

மானிப்பாய் வீதி,
ஆறுகால்மடம்.

தீவிர நோயாளர்களுக்கு வாட்வசதி, ஆய்வுகூடவசதி நிபுணத்துவ வசதியுடன், மீண்டும் தன் சேவையினை ஆரம்பித்துள்ளது.

**- பணிப்பாளர்**

(46323)



## வைத்தியம்

செங்கமாரி, அல்சர் ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலைகாலவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூல வியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர்; சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை
வைத்திய கலாநிதி,
**சி. இராசரத்தினம்**

(46279)


## 31 ஆம் நாளில் நினைவு கூருகிறோம்







### சி. அருளம்பலம் (சிமோல்)

(சட்டத்தரணி, J P, கொக்குவில் கிராமசபையின் முன்னாள் வெள்ளி விழாத் தலைவர், நல்லூர் தேசியப் பேரவை உறுப்பினர், அரசியல் அதிகாரி)

''பொது நல சேவையாளனின் சீரிய சேவைகளை நெஞ்சினில் இருத்துவோம்''

நன்றி மறவாத:
**கோண்டாவில் அபிமானிகள்.**

(46346)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள மாட்டு வண்டியுடன் இரண்டு நாம்பன் மாடுகள் விற்பனைக்குண்டு. விலை பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு: அ. இரத்தினம், அபிராமி அழகுசாதன மாடம். விக்ரோறியா வீதி, யாழ். நகரம். [46358]

### தவறிவிட்டது

தயாமதி தம்பிரத்தினம் என்பவரதுஇல.665752372V தேசிய அடையாள அட்டை, தவறிவிட்டது, கண்டெடுத்தவர்கள் இல. 9, பாரதி ஒழுங்கை, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தயவுசெய்து ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [46356]

சிவனியா மனோகரன்,என்பவரது இல. 0906002286 விசேட அடையாள அட்டை யாழ்ப்பாணத்திற்கும், கொக்குவில் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மணிராஜ் குளிர்பானகம்,துரை வீதி, கே.கே.எஸ். வீதி. இணுவில் எனும் முகவரியில் தயவு செய்து ஒப்படைக்கவும் [46361]

### சோதிடம்

97/98 ஈசுரவருடப் புத்தாண்டுப் பலாபலன்கள், ''எண்சோதிடம் உங்களை அதிர்ஷ்ட சாலியாக்கும் வெற்றிக்கனி'' எங்கும் விற்பனையாகிறது. வேலணை சோதிடர், V. A. சிவராஜா, 152 ''B'' அரசடி வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம். [46339]

### நூலாலயம்

'நூலகம் அறிவின் தாயகம்' ஈழத்து - தமிழகப் படைப்பாளிகளின் புதிய வெளியீடுகளை வாசித்துப் பயனடைய விஜயம் செய்யுங்கள்: லிங்க் லெண்டிங் லைப்ரறி, Ling Lending Library, சாவகச்சேரி. (45932)

### அக்கரைச் சீமையில்

இலங்கை, இங்கிலாந்து நாவல் பரிசளிப்பதற்கு ஏற்றது. மலிவு விலை ரூபா 25/- நாடகம் எழுதுவது எப்படி? ஒரு நாடகமும், 22 கட்டுரைகளும் ரூபா 50/- எழுதியவர்: அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை. [46104]

### சீயாக்காய்ப்பவுடர்

காவேரி சீயாக்காய்ப் பவுடர் இயற்கை நமக்கு அளித்த ஒப்பற்ற மூலிகையான கருசலாங்கண்ணி உட்பட ஏழு (7) வகையான இயற்கைப் பொருள்கள் சேர்த்து தயாரிக்கப்பட்டது. இப்பொழுது எல்லாக் கடைகளிலும் கிடைக்கும். தயாரிப்பாளர் கந்தசாமி அன் சன்ஸ், ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலி. (46201)

---


அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவர்க்கும்
எமது
புதுவருட நல் வாழ்த்துக்கள்

**சிவாஸ்**
**மணிக்கூட்டுத் தொழிலகம்**

உரிமையாளர்:- நா. ஆனந்தசிவம்
568 B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

★ சகல விதமான மணிக்கூடுகளும் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும்.
★ சகல விதமான மணிக்கூட்டுப் பற்றறிகளும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் ஆதரவுக்கு நன்றி.

(சி/486)


---

## 3 ஆம் மாத நினைவலை...



**சீவரட்ணம் உதயகுமார்**
**(கலட்டி கண்ணன்)**

அன்னை மடியினில்: **31 — 08 — 1964**
ஆண்டவனடியினில்: **16 — 01 — 1997**

கண்ணா! அன்பு மணிவண்ணா!
என் அன்புச் சோதரா!
என் பின் வந்த உயிர்ப்பிணைப்பே!

நீயோ மறைந்து மாதங்கள் மூன்று —ஆனால்
நேரம் மிகுந்த தின்னும் நித்திரையின்றி —நீ
வருவாய் வருவாய் கனவிலேனும்
வருவாய் என்றால் ...... ......?
கண்கள் உறங்க வெனும் காரியமுண்டா?
புதுவருடம் இன்று கண்ணா —நீ
புன்னகை பூத்த மலர் வதனத்துடன் —உன்
பிள்ளைச் செல்வங்களுடன் நிற்பாயே!
அப்போ தான் புலர்வேனே கண்களை
ஆனால் ...... ... ...
எல்லாமே இன்று ...... ..?
புறக்கணி ஆகி விட்டதே... .....?
புண்ணியவான் நீபோய் மாதமும்
மூன்று ஆகியதே!

ஆனாலும் ..............
நாள்கள் தான் நகர்ந்தாலும்
மாதங்கள் தான் மறைந்தாலும் — ஏன்
ஆண்டுகள் தான் சென்றாலும் ..... ......
ஆறுமா என் நெஞ்சம்!
பாசவலையில் எனை வீழ்த்தி விட்டு
பாதியில் நீ பறந்து தான் சென்றாயோ
கண்ணா! கண்ணா ! என்று கதறினாலும்
வருவாயா கண்ணா வருவாயோ!!!

உன் ஆத்மா சாந்தியடைய
நித்தம் பிரார்த்திக்கும்!

உன் அன்புக்கு ஓர்:
சுகுமாரன்
(சுகு அண்ணன்)

இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம். (46357)

---


அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது
**'புதுவருட' வாழ்த்துக்கள்**

மீண்டும் பழைய முகவரியில் புதுப்பொலிவுடன்

★ பழைய, புதிய சினிமாப் பாடல்களையும் பக்திப் பாடல்களையும் CD யில் இருந்து பதிவு செய்து கொள்வதற்கும்
★ புதிய பழைய திரைப்படங்களையும் CDயில் இருந்து பதிவு செய்து கொள்வதற்கும்
★ உங்கள் இல்லங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வீடியோப் படம் பிடித்திடவும்
★ வீடியோ ஓடியோ சம்பந்தமான பொருள்களை நியாய விலையில் பெற்றிடவும்

**சுப்பஸோ வீடியோ**
**ஓடியோ சென்ரர்**
(ரவி ஒளி கானம்)
இல. 100 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[சி/500]


---


## எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

எமது வாடிக்கையாளர், பேக்கரி உரிமையாளர்,
பாவனையாளர் அனைவருக்கும்
எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்
உரித்தாகுக.

பாண், பணிஸ் மற்றும் பேக்கரி
உற்பத்திப் பொருள்கள் தரம், நிறை
நியாயமான விலையில் பொதுமக்களுக்குக் கிடைக்கச் செய்வதே எம் பெரும் சேவை.

தரம், நிறை, விலையில் ஏதாவது குறைகள் இருப்பின் பொதுமக்கள் எமக்கு அறிவிக்கவும்.


அங்கத்தவர்களின் கவனத்திற்கு **15 - 04 - 97** செவ்வாய்க்கிழமை அலுவலக விடுமுறை தினமாகவும், **16 - 04 - 97** புதன்கிழமை வழமைபோல் வேலைகள் நடைபெறுமென்பதையும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

யாழ். மாவட்ட
பேக்கரி உரிமையாளர் சங்கம்

39, 3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (சி-491)


---

## 8 ஆம் ஆண்டு
## நீங்காத நினைவு



**S. T. சந்திரகுமார்**
(கிராமசேவையாளர், கரம்பன் மேற்கு)

அந்நியர் அழிப்பு: **14 — 04 — 1989**

தம்பி நீர் என்னை விட்டுப்பிரிந்து கண் கலங்கி என்ன செய்வதென தெரியாமல் தவிக்கும் வேளையில் கடவுள் அருளாலும் உயர்ந்த உத்தியோகத்தர்களாலும் உமது பதவி எனக்கு கிடைத்திருக்கின்றது.

ஒவ்வொரு நிமிடமும் உமது நினைவில் வாடும்.

அம்மா: செ. பாக்கியம்,
அக்கா: S. T. சகுந்தலாதேவி

40/05, கோயில் வீதி,
யாழ்ப்பாணம். (46317)

---


# சித்திரகலா படப்பிடிப்பாளர்

எமது வாடிக்கையாளர்களுக்கும் மற்றும் அனைவருக்கும்
ஈசுர புது வருட வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்வதுடன்
கறுப்பு வெள்ளைப் படம் எடுப்பதற்கும்
வர்ண சுருள் படம் கழுவி கொடுப்பதற்கும்
மற்றும் உங்கள் மங்களகரமான வைபவங்களை
வர்ண படம் எடுப்பதற்கும்
நீங்கள் நாடவேண்டிய இடம்:

**சித்திரகலா படப்பிடிப்பாளர்**
3, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர். (46344)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NEW SCIENCE HALL

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

**GENERAL ENGLISH COURSE**

★ சகல மொழித் திறன்களையும்
உள்ளடக்கிய கற்கை நெறி

ஆரம்பம்: 17 - 04 - 1997
10. 30 a. m.

ஆசிரியர்: த. ந. பஞ்சாட்சரம்

(46371)



# மருதம்ஸ்/காங்கேசன் வாச்வேக்ஸ்

**66, மணிக்கூட்டு வீதி,**
**யாழ்ப்பாணம்.**

18 வயது தொடக்கம் 25 வயதுள்ள ஆண்/பெண் இருபாலாரும், மணிக்கூடு திருத்துதல் பயிற்றப்படும் (செய்முறை 6 மாதம்) விரும்புவோர் மேல் விலாசத்தில்தொடர்பு கொள்ளலாம்.

ஆரம்பம்: 16-04-97
பி. ப 3 மணி தொடக்கம் பி. ப 5 மணி வரை

- நிர்வாகி

(சி/485)


# மரண அறிவித்தல்கள்

## இளையதம்பி சதாசிவம்

(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்)

மடத்தடி அல்வாய் கிழக்கைச் சேர்ந்த இளையதம்பி சதாசிவம் 12 - 04 - 97 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் பத்மாவதியின் அன்புக் கணவரும், சற்குணராஜா (சுவிஸ்), சற்குணவதி (கொழும்பு), சற்குணராணி (P. H. M. விஸ்வமடு), சற்குணேஸ்வரி, சற்குணதிலகம் (ஆசிரியை, புலோலி மெ. மி. த. க. பாடசாலை), சற்குணநாதன் (கொழும்பு), சற்குணேந்திரன் (U.K.), சற்குணலிங்கம் (U.K) ஆகியோரின் தகப்பனாரும், விஜயதேவி, A.C. செல்லையா, நவரட்ணம், இராசதுரை, வேணுகோபால் (பிரதிக்கல்விப் பணிப்பாளர், முல்லைத்தீவு), ஜீன், மாலா, சாந்தி ஆகியோரின் மாமனாரும், பாலகுமார், அஜன், நிலானி, நீர்ராஜ், கிருசாந்தி, பிரசாந்தன், பாலமுரளி, பார்த்தீபன், உதயராஜ், ஜனகன், கெவின், ரீனு, கோபிகா, பத்மநீரஜா, சுகல்யா, ஜோய் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13-04-97 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்;
மனைவி, மக்கள்

மடத்தடி, அல்வாய் கிழக்கு,

(46362)

## திருமதி ரமணி ஜெயக்குமார் -(கனடா)

யாழ்ப்பாணம் கன்னாதிட்டியைச் சேர்ந்த திருமதி ரமணி ஜெயக்குமார் 03- 04- 97 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் கொழும்பு-11, 148, செட்டியார் தெரு, கண்ணா ஜுவலரி உரிமையாளர், ஈ. எஸ். கந்தசாமி — புஸ்பராணி தம்பதிகளின் ஏக புத்திரியும், தாமோதரம்பிள்ளை ஜெயக்குமாரின் (ரூபன்) அன்பு மனைவியும், செல்வன் உமேஷ், செல்வன் ரமணன் ஆகியோரின் ஆசைத் தாயாரும், காலஞ்சென்ற உரும்பிராயைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை (பொலீஸ் இன்ஸ்பெக்டர்) தம்பதிகளின் அன்பு மருமகளும், கருணாகரன் (பிரான்ஸ்), ராஜசேகர் (பிரான்ஸ்), ரவீந்திரன் (ஈ.எஸ்.கே. கண்ணன் ஜுவலரி, கனடா), துவாரகன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும், திருமதி வசந்தி (பிரான்ஸ்), திருமதி நயானா (கனடா), திருமதி மேரி (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஜெயரூபி மற்றும் ஜெகநாதன், ஜெகநேசன், ஜெகதாம்பிகை, ஜெகவாணி, ஜெயச்சந்திரன், ஜெயக்குமாரி ஆகியோரின் மைத்துனியும், திரு. திருமதி நடராஜா (கொமிசனர் சாவகச்சேரி), திரு. திருமதி சுந்தரலிங்கம் (கொழும்பு), திருமதி நாகரத்தினம், கந்தசாமி (கொழும்பு), திருமதி நவரத்தினம் (நவாலி) ஆகியோரின் பெறாமகளும், திரு. திருமதி வசந்தகுமார் (நவாலி) அவர்களின் மருமகளும், அரசநாயகத்தின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12- 04- 1997 அன்று கனடாவில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தகவல்:
வசந்தகுமார்
(கிளி மாமா)

பிரசாத் வீதி,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(46359)

# கிளர்ச்சியாளர் கோரிக்கையை ஸயர் அதிபர் நிராகரித்தார்!

கின்ஸாசா, ஏப். 14

பதவி விலகிவிட வேண்டும் அல்லது நாட்டைவிட்டு வெளியேறி விடவேண்டும் என்று கிளர்ச்சியாளர் குழுத் தலைவர் லோறன் கபீலா கடைசியாக விடுத்திருந்த கோரிக்கையை ஸயர் அதிபர் முபுட்டு நிராகரித்து விட்டார்.

ஸயரின் பெரிய நகரமான லுபும்பாஸியின் வீழ்ச்சிக்குப் பின்னர் கபீலா இக் கோரிக்கையை விடுத்திருந்தார். இக் கோரிக்கையை ஏற்க மூன்று நாள்கள் கால அவகாசத்தையும் அவர் விதித்திருந்தார். ஆனால் அதிபர் முபுட்டுவோ தாம் பதவி விலகப்போவதில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார்.

'ஸயரின் தலைவர் நான் தான்; கும்பல்களின் தலைவர்கள் விடுக்கும் கோரிக்கைகளை ஏற்க முடியாது' என்று அவர் தெரிவித்தார்.

எனினும் கிளர்ச்சியாளர்களுடன் பேச்சு நடத்த தாம் தயார் என்றும் அவர் தெரிவித்தார்.

அதிபரை பதவி விலகுமாறு விதித்த மூன்று நாள் காலக்கெடு நேற்றுடன் முடிவடைந்துவிட்டது. தமது இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து விஸ்தரிக்கப் போவதாக கிளர்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர். (ஐ)

## உலக அரங்கில்

### பாப்பரசர் பாதையில் கண்ணி!

சரஜீவோ, ஏப். 14

பாப்பரசர் செல்லும் வாகனத் தொடரணி கடந்து செல்ல இருந்த பாலம் ஒன்றின் கீழே வெடிக்கத் தயாரான நிலையில் இருந்த பல நிலக்கண்ணிகளை பொஸ்னியப் பொலீஸார் கைப்பற்றினர் என்று அறிவிக்கப்படுகிறது.

பாப்பரசர் சரஜீவோ நகரை வந்தடைய சுமார் 2 மணிநேரத்திற்கு முன்னர் வெடிக்க வைக்கும் சருவியுடன் பொருத்தப்பட்டிருந்த இந்த 23 கண்ணி வெடிகளையும் பொலீஸார் மீட்டனர்.

பாப்பரசரின் பொஸ்னிய விஜயம் தொடர்பாக — அவரது பாதுகாப்பு குறித்து— எழுப்பபப்பட்டு வந்த கவலையை இச் சம்பவம் மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

பாப்பரசருக்கு பாதுகாப்பு வழங்கும் நடவடிக்கையில் அங்கு 20 ஆயிரம் பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பொஸ்னியாவில் உள்ள பல கத்தோலிக்க ஆலயங்கள் கடந்த சில வாரங்களாகத் தாக்குதல்களுக்கு இலக்காகி வருகின்ற வேளை பாப்பரசர் அங்கு விஜயம் செய்வது குறிப்பிடத்தக்கது.

நன்கு திட்டமிட்டு தீவிரவாதக் குழு ஒன்று இத் தாக்குதல்களை நடத்தி வருவதாக தேவாலயத் தலைவர்கள் தெரிவிக்கின்றனர். (ஐ)

### சிவகாசியில் மூடுவிழா

தமிழ்நாட்டின் சிவகாசியில் உள்ள சுமார் 300 தீக்குச்சித் தொழிற்சாலைகள் நேற்று முதல் காலவரையறை இன்றி மூடப்பட்டன.

இந்தத் தீக்குச்சித் தொழிற்சாலைகளில் பெரும் எண்ணிக்கையிலான சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டு வந்த முறைப்பாடுகளை அடுத்து இத்தொழிற்சாலைகளில் உள்ள சிறுவர்களின் விவரங்களைத் திரட்டுமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

அதன்படி மாநில அரசினால் இது தொடர்பாக விவரங்களைத் திரட்ட நியமிக்கப்பட்ட விசேட பணியாளர் குழுவின் செயற்பாடு குறித்து ஆட்சேபம் தெரிவித்தே இந்தத் தொழிற்சாலைகளை மூடிவிட உரிமையாளர்கள் முடிவு செய்துள்ளனர். (ஐ)

### 24 பேர் பலி

வட இந்தியாவில் ஹார்வால் பகுதியில் பயணிகள் பஸ் ஒன்று மலைச்சரிவில் வீழ்ந்ததில் 24 பயணிகள் பலியாகினர். 35 பேர் காயம் அடைந்தனர்.

திருமணச் சடங்கு ஒன்றில் பங்குபற்றச் சென்றவர்களே உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தோரில் மணமகனும் ஒருவர். (ஐ)

# 90 ஆம் நாள் நினைவலைகள்



## சீவரட்டிணம் உதயகுமார்

[கலட்டிக் கண்ணன்]

அன்னை மடியில் 31 — 08 — 1964
அநியாய அழிப்பில் 16 — 01 — 1997

காண முடியாமல் காததூரம்
போய்விட்டாய் எம்தலைவா
தவிக்கின்றோம் இங்கு நாம்
உம்பிரிவு தாங்காமல் ஐயகோ
நீ பிரிந்து தொண்ணூறு நாள்களும்
ஆயிற்று எங்குதான் போனாய் என
போன இடம் தெரியவில்லை.

அணையாத ஜோதியே
அழகான திருவுருவே - உனை
ஏன்தான் அழித்தனரென
அறியாமல் துடிக்கின்றோம்
எறும்பையும் கொல்லாத
பசுமைக் குணத்தோனே
உன்னைக் கொல்வதற்குக் - காரணம்
தான் யாதென்று எண்ணி
எண்ணித் துடிக்கின்றோம்.

விதி என்று சொல்வதா - சதி
என்று சொல்வதா என்னென்று
சொல்வதென்று தெரியாமல்
அழுகின்றோம் - அப்பா எங்கே
எனக் கேட்கும் மழலைகளின்
கேள்வி எம் அடிவயிற்றில்
நெருப்பை அள்ளிக் கொட்டுதய்யா

ஆற்றமுடியாமல் அல்லலுறுகின்றோம்
யார்சொல்லும் ஆறுதலும் அமைதி
தரவில்லை உன் குரலைக் கேட்கவே
அவாவாக இருக்கின்றோம் - நாம்
நினைவுலகில் வாழுகின்றோம்
எதிலும் உன் உருவம் நிழல்போல
ஆடுதய்யா - கண்ணை மூடினாலும்
திறந்தாலும் உன்னையே காணுகிறோம்
உன் நிழல் படத்தில் ஏற்றிய
தீபமதை இன்றுவரை அணைய
விடவில்லை உன்னை அணைத்தாலும்
உம் தீபத்தை நாம் அணையவிடவிலலை
அணையவிட மாட்டோமைய்யா

உண்ணுகிறோம் ஆனால்
உணவு உருசிக்கவில்லை
உறங்குகிறோம் ஆனால்
அமைதி கிடைக்கவில்லை
ஏன்தான் வாழ்கிறோம் என்று
எமக்குத் தெரியவில்லை நீ
இல்லா இவ்வுலகு நரகம்போல்
இருக்கிறது தெய்வம் என்னதெய்வம்
நீதான் எம்தெய்வம் எம்
கண்ணில் வழியும் கண்ணீர்ப்
பூக்களையே மாலையாய் அலங்கரிப்போம்
ஆறாது எம்துயர்
என்றென்றும் ஆறாது.

-குடும்பத்தினர்

குற்றாலம்,
இராமநாதன் வீதி, கலட்டி.

(46369)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாள் துணை

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் சின்னையா அருளம்பலம்

(கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன் மணி அம்பாள் ஆலய முன்னை நாள் தர்மகர்த்தா சபைத் தலைவர், நல்லூர்த் தொகுதி முன்னைநாள் நாடாளுமன்ற உறுப்பினர்)

பல்லாண்டு காலமாக மனோன்மணி அம்பாள் ஆலய முன்னை நாள் தர்மகர்த்தா சபைத் தலைவராக இருந்து ஆலய திருப்பணிகள் பலவற்றை அம்பாளின் திருவருளினால் நிறைவேற்றி ஆலயத்தை தெய்வீகப் பொலிவுடன் விளங்கச் செய்தீர்கள்.

மனோன்மணி அம்பாளின் திருவடித் தாமரையின் கீழ் தங்கள் ஆத்மா சாந்தியடைவதாக.

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து
மனோன்மணி அம்பாள் ஆலய
பரிபாலனசபை.

(46347)

# ஆலயத் துப்புரவுப் பணியில் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 14

யாழ்ப்பாணம் கோட்டை முனீஸ்வரன் கோயிலுக்குச் செல்லும் முனீஸ்வரன் வீதியும், கோயிலின் சுற்றுப்புறங்களும் அடியார்கள் அச்சமின்றி நடமாடக்கூடிய வகையில் ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பினரால் துப்புரவு செய்யப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப் பட்டிருக்கின்றது.

புதுவருட தினமான இன்று பக்தர்களின் வழிபாட்டுக்கு இந்த ஆலயம் திறந்துவிடப் படும் என்பதும்—

இனிமேல் வெள்ளிக்கிழமைகளில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை பக்தர்கள் அங்கு சென்று வர முடியும் என்பதும் தெரிந்ததே,

(உ)

மீண்டும் ஆரம்பம்!

## றோசுகி ரெயிலறிங்

மீண்டும் பழைய இடத்தில் இன்று (14-04-97) முதல் ஆரம்பமாகியுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**A. ROSA**
இல.5, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(46367)

புத்தாண்டு வாழ்த்துக்கள்

# வினோ நகைப்பூங்கா ஸ்தாபனத்தினர்

தமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறார்கள்

அசல் 22 கரட் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்

தரம் நாடுவோர் தவறாமல் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம் யாழ். நகரில்

## வினோ நகைப் பூங்கா

185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்:
சடாட்சரம் புவிச்சந்திரன்
நீர்வேலி.

(சு/502)

எமது வாடிக்கையாளர், நண்பர்களுக்கு எம் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

வண்ண நகையுகத்து வளமார் வகையனைத்தும்
எண்ணம்போல் தேர்ந்தெடுக்க ஏற்றதோர் நகையகம்



# அருள்முருகன் நகை அகம்

நம்பிக்கை நாணயம் உத்தரவாதத்துடன் 22 கரட் தங்க நகைகளை பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்:

## அருள்முருகன் நகை அகம்

96/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (தலைமையகம்)

## சாரங்கா நகைமாடம்

177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(இணையகம்)

## சிவா நகைமாடம்

கண்டி வீதி, சாவகச்சேரி.
(கிளையகம்)

0 பழைய நகைகள் கூடுதலான பெறுமதிக்கு வாங்கப்படும்

(46354)

வாடிக்கையாளர் அனைவருக்கும் எமது இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

# ஜெசிபா ஏஜென்சி

# JEISHEBA AGENCY

யாழ். நகரில் கட்டடப் பொருள்கள் அனைத்தும் நியாய விலையில் பெற்றுக் கொள்ள ஒரே ஸ்தாபனம்

132, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

132, STANLEY ROAD,
JAFFNA.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14 - 04 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.